1330

23 JUN 1931

தொகுதி 10.] 1931௵ மேமீ 1௳ [பகுதி 4.

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 4-பாகம் விலை ரூபா 8-4-0

அமராவதி 2-ரூபா.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம்பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

அப்போது ஏகநாயகிச் சீமாட்டி, "ஆமாம்; கர்னல் மாரப்பனும், குமாரவேல் பிரபுவும் ஏதோ மதனவல்லியைப் பற்றிப் பேசிக்கொண்டார்களே; அதென்ன சங்கதியோ தெரியவில்லை" என்றாள். அதற்குப் பெரியநாயகி, "அதைப் பற்றி நமக்கென்ன? பிறருடைய விஷயம் நமக்குவேண்டாம். நம் காரியத்தைக் கவனிப்போம்" என்றுகூறி அவளை அழைத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டுச் சென்றாள்.

இப்போது நாம் ஏரிக்கரையில் பலராமனைச் சந்தித்து விட்டு இளவரசியின் மாளிகைக்குச் சென்ற மூன்று சகோதரிகளான இரங்கம்மாள், அம்புஜம், ஜானகி ஆகியவர்களைப் பற்றிக் கவனிப்போம். நாம் மேலே கூறியபடி அம்புஜம் தன் சகோதரிகளான இரங்கம்மாளையும் ஜானகியையும் சந்தித்த போதும், அவள் சொற்பநேரத்துக்கு முன் பலராமனுடன் இன்பமாகக் காலங்கழித்த சந்தோஷ முகத்துடனேயே இருந்தாள். அப்போது ஜானகி அவளைப்பார்த்து, "நீ அவனை மயக்கிவிட்டாயா? உன்னிடம் அவனுக்குக் காதல் ஏற்பட்டு விட்டதோ" என்று கேட்டாள். அதற்கு அம்புஜம், "ஆம், என்னிடம் அவனுக்குச் சிறிது காதல் ஏற்படும்படி செய் திருக்கிறேன். நான் என் சாகஸங்களால் ஒருவாறு அவனது மனதை மாற்றினேனே யொழிய முதல் தடவையிலேயே அதிகம் செல்ல முடியவில்லை எப்படியிருந்தாலும் நாளைய தினம் நான் அவனைப்பார்க்கும் சமயம் வாய்க்குமாயின் நான் பூரா வெற்றி யடைந்துவிடுவேன் என்பதில் ஆட்சேபமில்லை. பலராமன் நமக்காக வாதாடி நாம் இப்போது நமக்கு ஏற்பட் டிருக்கும் ஆபத்தினின்றும் விலகும்படி நமக்கு உதவி செய் வான் என்[illegible]சயம், [illegible] கூறினாள்.

[illegible]போது இரங்கம்மாள் [illegible]லுடன் "ஆம்; உண்மையிலேயே அப்படிப்பட்ட அ[illegible]தியும் சமாதான

17

186557.
சென்னை-600 008
3 JUN 198[illegible]

மும், திருப்தியும் ஏற்படுமாயின் எவ்வளவோ சந்தோஷமாக இருக்கும்'' என்று கூறவே ஜானகியும், "நானும் அதைத் தான் சொல்கிறேன். நாம் இப்போது இந்த ஆபத்தினின் றும் தப்பித்துக்கொண்டால் போதும். இனி நாம் எத்தகைய சதியாலோசனைகளும் செய்யவேண்டாம். நமக்கு வேண்டிய தெல்லாம் நாம் நமது காதலர்களை யடையவேண்டியதுதான். இதோ இப்போது ஏரிக்கரையில் நடந்த சம்பவத்தைச்சொல் கிறேன் கேள்'' என்று கூறிவிட்டு உடனே சொற்ப நேரத் துக்குமுன் குமாரவேல் பிரபுவையும், கர்னல் மாரப்பனையும் சந்தித்த விஷயங்களைக்கூறினாள். அக்கனவான்க ளிருவரும் மீண்டும் பரிதிபுரம் வந்திருக்கிறார்களென்னும் செய்தியைக் கேட்டு அம்புஜம் ஆச்சரியமடைந்ததுடன், "சரி; அவர்க ளுக்கும் விரைவில் கடிதம் எழுதுவதாகச் சொன்னதும் சரி தான். ஆனால் உண்மையில் கடிதம் எழுதுவதாக நீ நினைக்க மாட்டாய் என்று நினைக்கிறேன். ஏனெனின் நீ முன்பு சொன்ன விஷயங்களை மறந்திருக்கமாட்டாயல்லவா?'' என்று சொன்னாள்.

அப்போது ஜானகி, அந்தரங்கத்தில் யார் என்ன சொன்னபோதிலும் மறுபடியும் தன் காதலன் குமாரவேல் பிரபுவுடன் சம்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டு இன்பமாக இருப்பதென முடிவு செய்துவிட்டிருந்தாலும் மேலுக்கு, "ஆம், எழுதமாட்டேன்'' என்று திட்டமாக அறிவித்தாள்.

அச்சமயத்தில் அவர்கள் மூவரும் இளவரசியின் மாளி கையில் நுழைந்தார்கள். அப்போது ஏழுமணி ஆனதால் அவர்கள் தங்கள் அறைகளுக்குச் சென்று இராப்போஜனத் துக்கு செல்லவேண்டிய ஆடைகளை அணிய[illegible] சாவ காசமிருந்தது. அன்று இரவு வழக்கம்போல் இளவரசி மற்ற வர்களுடன் சாப்பிடவாமல் அன்றுபகல் நடந்த சம்பவத்

தின் காரணமாக விசாரத்துடன் இருந்து மாடிமீதே சாப்பிட்டுவிட்டாள். பலராமனும் அன்று அங்கிருக்கவில்லை. ஏனெனின் அவன் நகரில் எங்கோ நண்பனுடன் சாப்பிடப் போவதாகச் சொல்லிவிட்டான். ஜகதீசனுடன் பேசச் சென்றுவிட்டான். ஆகவே அன்று இரவு அங்கு போஜன ஹாலில் சாப்பிட்டவர்கள் ஏழெட்டு மாதர்களே. எனவே சாப்பிட்டு முடிக்கவும் அதிக நேரமாகவில்லை. இராஜம்மாள் அதுவே சமயமெனக் கருதி இரங்கம்மாளைத் தனியே அழைத்து அன்றுமாலை ஏரிக்கரையில் பலராமனைச் சந்தித்த போது என்ன நேர்ந்தது என்று விசாரித்தாள். அப்போது அவர்களிருவரும் ஒரு தனியறையில் புகுந்துகொண்டு இரகசியமாகப் பேசினார்கள். இரங்கம்மாள், தான் நேரில் இருந்த போது பலராமன் சொன்னதையெல்லாம் சொல்லிவிட்டுப் பிறகு அம்புஜம் தெரிவித்த நம்பிக்கைகளையும் அறிவித்தாள். இதையெல்லாம் கேட்டபிறகு இராஜம்மாள், "அப்படியானல் இன்றிரவு பன்னிரண்டு மணிக்கு நீங்கள் ஜகதீசனைச் சந்திக்கவேண்டும் போலும்" என்று கேட்டாள்.

அப்போது இரங்கம்மாள் மிக்க நடுக்கத்துடன், "இன்று இரவு பன்னிரண்டுமணிக்கா" என்று சொன்னாள். அதற்கு இராஜம்மாள், "பலராமன் பேசியபோது அன்புடன் நடந்துகொண்டானல்லவா?" என்று விசாரிக்க இரங்கம்மாள், "இல்லை, இல்லை; அன்பு இல்லை. ஆனால் பொறுமையுடன் பேசினான்" என்று கூறினாள். உடனே இராஜம்மாள், "அப்படியானல் எனக்குத்திருப்தி இராது. அதுபிரயோஜனப்படாது. ஆனால் அம்புஜம் உண்மையில் அவனை வென்றுவிடலாமென்று நினைக்கின்றாளா?" என்று கேட்டாள். அதற்கு இரங்கம்மாள், "ஆம், ஆம்; அவள் அப்படித்தான் நினைக்கின்றாள். பலராமன் நம்மைக் காப்பாற்றுவானென்றும் நிச்

சயமாக நம்புகின்றாள்,'' என்று தெரிவித்தாள். உடனே இராஜம்மாள், "ஆனால் ஜகதீசன் நம்மை அழித்துவிடுவதென்று முடிவு செய்துவிட்டால் பிறகு நம்மைக்காக்க பலராமனாலும் முடியாது. எனினும் இன்றுமாலை நமது அம்புஜம் பலராமனை மயக்கித் தன்வசப்படுத்திக் காரியம் முடிந்துவிட்டிருந்தால் அவளைக் காக்கவாவது பலராமன் தன்னாலியன்ற பிரயத்தனங்களையெல்லாம் செய்வான். அப்போது அவன் நம்மையும் காக்க நேரிடும். ஆனால் அப்படிக் காரியம் முடியாமல் வெறும் காதல்மட்டும் ஏற்படும்படி செய்திருப்பாளாயின் அக்காதல் சொற்பநேரத்துக்குள் மறைந்துவிடும். இப்போது பலராமன் நகருக்குச் சென்றிருப்பதன் காரணமென்ன என்பது தெரியுமா? அவன் எந்த சினேகிதன் வீட்டுக்கும் சாப்பிடச்செல்லவில்லை. ஜகதீசனைக் கண்டு பேசவே போயிருக்கிறான்'' என்று கூறினாள்.

அதைக்கேட்ட இரங்கம்மாள், அச்சத்துடன், "அப்படியானால் இன்னமும் நாம் பழையபடி ஆபத்தில் இருக்கின்றோம் என்றுதான் நினைக்கிறாயா?'' என்று கேட்டாள். அதற்கு இராஜம்மாள், "ஆம்; நான் அப்படித்தான் நினைக்கிறேன். ஆதலின் நான் சொன்னபடி செய்வதற்குத் தயாராக இருங்கள். இன்று இரவு ஜகதீசன் உங்களை மன்னிப்பதாகச் சொல்லிவிட்டால் டாக்டர் மணவாளனிடம் ஒன்றும் செய்யவேண்டாம் என்று சொல்லிவிட்டு வா. இல்லையேல் நீ ஒன்றும் கூறாது வந்துவிட்டால் மணவாளன் ஜகதீசனையும் பெரியநாயகிச் சீமாட்டியையும், தீர்த்துவிடுவான். நாம் இங்கே பலராமனைப் பார்த்துக்கொள்வோம்'' என்று ஒரே தீர்மானமாக உறுதியுடன் கூறினாள். அப்போது இரங்கம்மாள், "ஆனால் அம்புஜம் சும்மா இருப்பாளோ; பலராமன் மட்டுமாவது பிழைக்கவேண்டும் என்று கேட்கமாட்டாளா? பலராமனை மயக்கித் தன்வசப்படுத்திக்கொள்ள அவள் பிர

யத்தனப்பட விரும்புவாளல்லவா?'' என்று கேட்டாள். அதற்கு இராஜம்மாள் மிக்க கோபத்துடன், "அடீ, முட்டாள் பெண்ணே! இந்த விஷயங்களையெல்லாம் அம்புஜத்துக்குத் தெரியப்படுத்தலாகாதென்பது உனக்குத் தெரியவில்லையா?'' என்று அதட்டிக் கூறினாள்.

அதற்கு அவள், "ஓ! இப்போது நீ சொல்வதைத் தெரிந்துகொண்டேன். கடவுள் அருளால் நானும் அம்புஜத்தைப்போலவே இவ்விஷயங்களையெல்லாம் அறியாதவளாய் இருக்கலாகாதா?'' என்று அச்சத்துடனும் துயரத்துடனும் கூறினாள். அப்போது இராஜம்மாள் மிகவும் கோபமடைந்து, "போதும்! இம்மாதிரி வார்த்தைகளையெல்லாம் நிறுத்து. இக்காரியங்களையெல்லாம் நீ உன் கையால் செய்யப்போவதில்லை. சந்தேகமும் நம்மீது ஏற்படாது. அங்கே டாக்டர் மணவாளன் விஷத்தை அருந்தக்கொடுத்து பெரியநாயகியையும் ஜகதீசனையும் கொன்றுவிடுவான். இங்கு நான் வெறியன், தொம்பன் முதலிய முரடர்களை மெதுவாக அழைத்து வந்து நீங்கள் ஜகதீசனிடமிருந்து திரும்பிவரும் வரை என் அறையில் மறைந்திருக்கும்படி செய்கிறேன். நீங்கள் திரும்பி வரும்போது நீ மணவாளனிடம் ஒன்றும் சொல்லவில்லையென்றால் அவன் அவர்களைத் தீர்த்துவிடுவான். இங்கு இம்முரடர்கள் பலராமனைத் தீர்த்துவிடுவார்கள்,'' என்று கூறினாள். அதற்கு இரங்கம்மாள், "தயவுசெய்து விவரத்தையெல்லாம் என்னிடம் கூறவேண்டாம். எங்களை இப்போதுள்ள பெரிய விபத்தினின்றும் காப்பாற்றுவதற்கு அவசியமான எந்த முறையையும் நீ அனுஷ்டித்துக்கொள். ஆனால் ஐயோ கடவுளே! அந்த விவரங்களையெல்லாம் மட்டும் என்னிடம் கூறவேண்டாம். இந்த நாள்முழுதும் கழியட்டும். பிறகு பார்த்துக்கொள்வோம்'' என்று அச்சத்துடனும் இரக்கத்துடனும் கூறினாள்.

இரங்கம்மாள் இவ்வாறு அச்சப்படுவதைக் கண்டு, இராஜம்மாள், "இப்படியெல்லாம் பயப்பட்டால் எப்படிமுடியும்? என்னைப் பார்த்தாவது நீ தைரியமுள்ள பெண்ணாய் இருக்கக்கூடாதா? சமயம் வரும்போது நான் சிறிதும் பயப்படாமல் மிக்க உற்சாகத்துடனும் சுறுசுறுப்புடனும் ஆடவர்களைப்போல் எதையும் தைரியமாகச்செய்வேன் என்று முன்னமே கூறியிருக்கிறேனல்லவா? சாப்பாட்டு அறையைவிட்டு நாம் அதிகநேரம் வெளியில் இருக்கக்கூடாது. ஆகவே, வா போவோம். நீ மனதை தைரியப்படுத்திக்கொள். இதையெல்லாம் யாரிடமும் சொல்லாதே. முக்கியமாகப் பலராமனைப்பற்றிய சங்கதியை அம்புஜம் காதிலும் போடவேண்டாம். நான் வெளியில் ஏரிக்கரைக்குச் சென்று வெறியன் முதலிய முரடர்களை அழைத்துவருகின்றேன்" என்று விவரமாகக் கூறினாள்.

இவ்வாறு கூறிவிட்டு இராஜம்மாள் அந்தத் தனியறையினின்றும் வெளியே போய்விட்டாள். இரங்கம்மாள் மட்டும் சிறிதுநேரம் அங்கேயே தங்கித் தனது முகம் முதலியவற்றையெல்லாம் துடைத்துக்கொண்டு பிறகு சாப்பாட்டு அறைக்குச்சென்றாள். அப்போது மணி ஒன்பது. ஆகவே பலராமனும் வெளியிலிருந்து மாளிகைக்குத் திரும்பிவந்திருந்தான். இரங்கம்மாள் அவ்வறையில் நுழையும்போது பலராமன் ஒரு சோபாமீது சாய்ந்தவண்ணம் ஏதோ ஒரு புஸ்தகத்தைப் படிப்பவன்போல் பாசாங்குசெய்து அம்புஜத்தின் அழகையும் தோற்றத்தையும் ஒற்றைப் பார்வையுடன் கவனிப்பதைக் கண்டாள். அதேசமயத்தில் அம்புஜமும் பலராமன் தன்னையே கூர்ந்து நோக்குகிறான் என்பதைத் தெரிந்துகொண்டு, சோபாவுக்கருகில் விழுந்த எதையோ ஒன்றை எடுப்பவள் போல் குனிந்து மெல்லியகுரலில் பலராமனுக்குக் கேட்கும்படி, "நீ என்னையே கவனிப்பதைக்கண்டேன். ஆனால் நான்

ஒன்றும் யாருக்கும் தெரிவிக்கவில்லை'' என்று கூறினாள். அவனும் புஸ்தகத்தைப் பார்த்துக்கொண்டே மெதுவாக "அதுதான் நல்லது'' என்று விடையளித்தான். அம்புஜம் மிகவும் சந்தோஷமடைந்து எப்படியாவது பலராமனுடன் தான் இன்பம் அனுபவிக்கப்போவது நிச்சயமென அறிந்து கொண்டு அந்த நினைப்பினாலேயே ஆனந்தங்கொண்டு தன் ஆசனத்தில் அமர்ந்தாள்.

135 - வது அத்தியாயம்

கர்னல் மாரப்பனும் குமாரவேல்பிரபுவும் அதேநாள் இரவில் சுமார் எட்டுமணிக்குமேல் தாங்கள் தங்கியிருந்த ராயல் ஓட்டலில் ஆகாரம் அருந்திக்கொண் டிருந்தனர். அப்போது அவர்களிருவரும் அதிகம் தெரிந்தவர்கள்போல் இருந்தார்களென்றாலும் அவர்களிருவரும் பரஸ்பரம் அதிகம் மனம்விட்டுப் பேசாமல் ஜாக்கிரதையாக இருந்தார்கள். எனினும் இறுதியாகக் கர்னல் மாரப்பன் துணிந்து, "சரிதான், பாவம்! இவ்வூர் பெண் ஒருத்தியுடன் உனக்கு முன்பு சம்பந்தம் ஏற்பட்டுவிட்டதென்று சொன்னாயே. அவளைப்பற்றி என்னசெய்யப்போகிறாய்?'' என்று குமாரவேல் பிரபுவைப் பார்த்துக் கேட்டான். அதற்குக் குமாரவேல், "நாளையதினம் நான் அவள் வீட்டுக்குப்போய் அவளைப் பார்ப்பேன். சொற்பநேரம் அவள் அழுவாள், என்னைக் குறை கூறுவாள், பல விஷயங்களை முறையிடுவாள். அவ்வளவுதானே! அதையெல்லாம் வேடிக்கையாகப் பார்த்துவிட்டுப் பிறகு அவளுடன் சமாதானம் செய்துகொண்டு அவளுக்கு ஏதேனும் நல்லவழி செய்துவிட்டு வரவேண்டும்'' என்று கூறினான். அப்போது கர்னல் மாரப்பன் சிரித்துக்

கொண்டே ஹாஸ்யமாக, "யாரேனும் ஒரு இளைஞனைப்பிடித்துக்கொண்டுபோய் அவளை அவனிடம் ஒப்படைத்துவிட்டால் அவன் அவளைப் பாதுகாப்பதுடன் அவளுக்குப் பிறக்கப்போகும் குழந்தையையும் காப்பாற்றுவான். குழந்தையைக் காப்பதற்காக நீ ஏதேனும் சிறிது பொருளுதவி செய்துவிட்டால் போகிறது" என்று சொன்னான்.

அதைக்கேட்ட குமாரவேல்பிரபுவும் அவ்விஷயத்தில் அதிக உற்சாகமில்லாதவனேபோல் அசட்டையுடன், "ஆம்; அப்படித்தான் ஏதேனும் ஓர்வழிசெய்யவேண்டும். எனினும் அவள் நல்ல இருதயமுடையவள். உண்மையான அன்பைக் கவனிப்பாளேயொழிய பணத்தைப் பொருட்படுத்துபவளல்ல. ஒருவன் அன்பைச் செலுத்தவில்லையென்றால் அவன் எவ்வளவு செல்வமானாயினும் அவனை லட்சியம் செய்யமாட்டாள். அப்படிப்பட்ட நற்குணமுள்ள அவளுக்கு ஏதேனும் நல்லவழி செய்யவேண்டும்" என்று கூறினான். அவர்களிருவரும் அவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் அந்த ஒட்டலின் சேவகன் அவர்களிடம் வந்து ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றான். அதைப் பெற்றுக்கொண்ட குமாரவேல்பிரபு, "ஆ! இது ஒரு மாதின் கையெழுத்தாக இருக்கிறது. எழுத்தும் நன்றாகவே இருக்கிறது" என்று கூறினான். உடனே கர்னல் மாரப்பனும் "அம்புஜம், ஜானகி ஆகியவர்கள் எழுதியதா" என்று மிக ஆவலுடன் பரிந்து கேட்டான். அதற்குக் குமாரவேல்பிரபுவும், "அதற்கென்ன சந்தேகம்; அந்தப் பரிதிபுரத்தில் நமக்கு வேறு யார் கடிதம் எழுதவேண்டும்?" என்று கூறிக்கொண்டே அக்கடிதத்தின் உரையைக் கிழித்து அதிலிருந்த கடிதத்தை எடுத்தான். அதில் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது:—

"அம்புஜமும் ஜானகியும், கர்னல் மாரப்பனும் குமாரவேல்பிரபுவும் தங்களுக்கிழைத்த தீமைகளைப்பற்றி நன்றாக

ஆலோசித்தார்கள். எனினும் அந்த ஆடவர்கள் அவ்வாறு நடந்துகொண்டதற்குக் காரணம் என்ன என்பதைப்பற்றிச் சமாதானங்கூற அவகாச மளிக்கவேண்டியது நியாயமே என்று கருதுகின்றனர். ஆதலின் இன்று இரவு சரியாக ஒன்பதரை மணிக்கு ஏரிக்கரைக்குக் கர்னல் மாரப்பனும் குமாரவேல்பிரபுவும் வந்தால் அம்புஜம், ஜானகி ஆகிய இருவரையும் சந்திக்கலாம்''

இவ்வாறு குமாரவேல்பிரபு படித்துக்காட்டியதும் கர்னல் மாரப்பன், 'சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல்' என்பதுபோலச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் இக்கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. இப்போது நீ என்ன சொல்லுகிறுய். உடனே நாம் அங்கேபோவோமா? என்று பரிவுடன் கேட்டான். குமாரவேலும், ''தடையில்லாமல் போவோம். நானும் நமது காரியத்தை விரைவில் முடித்துவிட்டுச் செல்ல விரும்புகின்றேன். முன்பு நான் அந்த அழகிய கன்னிகை ஜானகிக்காகக் காலஹரணம் செய்ததேபோல் இப்போது செய்யத் தயாராயில்லை. நான் அவளிடம் உண்மையைச் சொல்லி எப்படியேனும் விரைவில் காரியத்தை முடித்துவிட முயற்சிப்பேன்'' என்றுன். அப்போது கர்னல் மாரப்பன், ''நானும் அம்புஜம் விஷயத்தில் இவ்வாறே நடந்துகொள்ளப்போகிறேன். ஏனெனின் நானும் விரைவில் காரியத்தை முடித்துக்கொண்டு நாடுதிரும்ப விரும்புகின்றேன்'' என்று கூறினன்.

அப்போது குமாரவேல்பிரபு, ''உன் எதிர்கால திட்டத்தைப்பற்றி இப்போது பேச்சுவேண்டாம். நாம் இருவரும் உடனே ஏரிக்கரைக்குச் சென்று ஆகவேண்டிய காரியத்தைக் கவனிப்போம்,'' என்றுன். உடனே அவர்களிருவரும் புகைச்சுருட்டைப் புகைத்துக்கொண்டே ஓட்டலைவிட்டுப்

புறப்பட்டு ஏரிக்கரையை நோக்கிச்சென்றனர். அவர்கள் மெதுவாக நடந்து ஒன்பதரைக்கு ஐந்துநிமிஷம் இருக்கும் போதே ஏரிக்கரைக்குப் போய்ச்சேர்ந்தார்கள். அன்று இரவு நட்சத்திரவெளிச்சம் மிக அழகாய் இருந்தது. அவர்கள் நீண்டநேரம் காத்திருக்கும்படி நேரவில்லை. சரியாக ஒன்பதரை மணிக்கெல்லாம் இரண்டுமாதர்கள் முகமூடியுடன் அங்கேவந்து அவ்வாடவர்களைப் பார்த்தார்கள். உடனே அவர்களில் ஒருத்தி குமாரவேல் பிரபுவின் கரத்தைப் பிடித்துக்கொண்டு அவனை மாரப்பனிடமிருந்து பிரித்துத் தனியே அழைத்துச்சென்றாள். மாரப்பனை மற்றொருமாது அவ்வாறே கரத்தால் பிடித்து வேறோர்பக்கம் அழைத்துச்சென்றாள்.

குமாரவேல்பிரபு, தன் கரத்தைப்பிடித்த அம்மாதின் கரத்தை எடுத்துத் தன் உதட்டின்மீது வைத்து அழுத்தி முத்தமிட்டுக்கொண்டே, "நீ உன் முகமூடியை அப்புறப் படுத்தலாகாதா? வெகுநாட்களுக்குப் பிறகு இப்போது சந்திக்கிறபடியால் உன்னை ஒரு முத்தமிட எனக்கு அனுமதியளிக்கலாகாதா? ஏன் ஒன்றும் பேசாமலிருக்கிறாய்? என்ன கோபம்? அப்படித்தான் கோபமிருந்தாலும் மன்னித்துக் கொண்டு உடனே என்னுடன் வாய்திறந்து பேசு! வா, சமீபத்தில் வந்து உன் முகமூடியைத்திற" என்று ஆவலுடன் கேட்டுக்கொண்டான். அவன் அவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் அம்மாது அவன் கரத்தைப்பிடித்து ஏரிக்கரையிலுள்ள துறைமுகக் கட்டடத்தின் மற்றோர் புறத்துக்கு அழைத்துச்சென்றாள். இதனால் கர்னல் மாரப்பனும் அவன் கரம்பற்றியபெண்ணும் ஒருபுறமும், குமாரவேலும் மற்றொரு மாதும் வேறொரு பக்கமுமாக இருந்தனர்.

துறைமுகக் கட்டடத்தின் வேறோர் பக்கம் சென்றும் அம்மாது வாய்திறந்து பேசாமலிருந்தபடியால் குமாரவேல்

பிரபு, "என் அன்புள்ள கண்மணியே! இன்னமும் நீ பேசாம லிருக்கிறாயே; இது உனக்குத் தகுதியா? இப்போது நீ பேசா விட்டால் நானாக உன்வாயைத் திறப்பேன்" என்று கூறிக் கொண்டே தன்கையை அவள் கழுத்தில்போட்டு அவள் முகமூடியை அப்புறப்படுத்த முயன்றான். அச்சமயம் அவள் பலாத்காரமாக விடுவித்துக்கொண்டு தூரசென்று நின்று தன் முகமூடியை எடுத்துவிசிறி எறிந்து, "இதோபார்! என் முகத்தைப்பார்" என்றாள். அவளைக்கண்டதும் அவள் பெரியநாயகிச்சீமாட்டி என்பதைத் தெரிந்துகொண்டதும் அச்சத்தாலும் வெட்கத்தாலும் மெய்நடுங்க, "ஆ! இப்படியும் நேருமா? இதுவும் சாத்தியமா?" என்று உளறினான். அப்போது அவள் மிக்க கோபத்துடன், "ஆம்; நீ என்னைக் கேவலமாக விளையாட்டுபொம்மை என மதித்து எறிந்து விட்டு வந்தாயல்லவா? இதோ இங்கு வந்திருக்கிறேன்" என்று பதிலளித்தாள்.

ஆனால் அவள் அவ்வாறு கூறிமுடிப்பதற்குள் அவள் மறைத்து வைத்திருந்த கைத் துப்பாக்கி வெடித்தது. அப்போது, "ஐயோ கடவுளே" என்னும் சத்தம் கேட்டது. சற்றுநேரத்துக்கெல்லாம் ஏதோ ஒரு பெரிய சாமான் ஏரியில் போடப்பட்ட சத்தமும்கேட்டது. உடனே கட்டடத்தின் இப்பக்கத்தில் பயங்கரமான சத்தமின்மை காணப்பட்டது. கட்டடத்தின் மற்றொரு பக்கத்திலும் இத்தகைய சம்பவமே நேர்ந்தது. இக்காரியம் முடிந்த சொற்ப நேரத்துக்கெல்லாம் பெரியநாயகிச் சீமாட்டியும் ஏகநாயகியும் சந்தித்து கொலைநடந்த அவ்விடத்தினின்றும் அப்பால் போய் விட முயன்றார்கள். ஒருவரையொருவர் காரியம் முடிந்ததா என்று கேட்டுக்கொண்டார்கள். பிறகு அவர்கள் ஒன்றும் பேசாமலும் திரும்பிப்பாராமலும் தாங்கள் இழைத்துவிட்ட

மகா கொடியசெயலின் பாவம் அவர்களைச் சூழ அவர்கள் அச்சத்துடனும் திகைப்புடனும் நகரம் சென்றார்கள்.

ஏரிக்கரையில் இக்காரியங்களெல்லாம் முடிந்து அரை மணி நேரத்துக்குப் பிறகு மூவர் அவ்விடம் வந்தார்கள். அவர்கள் அங்கே யாருமில்லாமலும் அமைதியாகவும் இருப்பது கண்டு சந்தோஷத்துடன் துறைமுகக் கட்டடத்துக்கருகில் சென்றனர். அவர்கள் வெறியன், தொப்பன், தொம்பனே. அவர்கள் முன்பு ஒரு குழந்தையின் பிரேதத்தை இழுத்துக் கொடுத்ததற்காக ஜகதீசனிடமிருந்து பெற்ற தொகையைச் சூதாட்டத்திலும் மதுபானத்திலும் செலவழித்துவிட்டார்களாதலால் மீண்டும் பணம் பெறுவதற்காக ஏதேனும் பிரேதங்களை இழுத்து டாக்டர் மனவாளனிடம் சேர்ப்பிக்கும் எண்ணத்துடன் அங்கேவந்தனர். அவர்கள் காலத்தை வீணாக்காமல் தங்கள் வலையை ஏரியில் விசிறி இழுத்ததில் அவர்கள் எதிர்பாராதவிதமாய் விரைவில் ஒரு பெரிய பிரேதம் அவர்களுக்கு அகப்பட்டது. அவர்கள் மிக்க சந்தோஷமடைந்தார்கள். அவர்களில் ஒருவன், "ஓகோ; நமக்கு ஏதோ நல்ல அதிர்ஷ்டம்தான். அதிக கஷ்டமில்லாமலே பெரிய பிரேதமொன்று அகப்பட்டுவிட்டது. நாம் இதற்குள் ஏன் போய்விடவேண்டும்? நம்முடைய அதிர்ஷ்டத்தைச் சரியாகச் சோதித்துப் பார்ப்போம் வாருங்கள். இக்கட்டடத்தின் மற்றொரு பக்கத்திலும் இவ்வாறே இழுத்துப் பார்ப்போம்" என்று கூறினான். அவர்கள் அப்பிரேதத்தைப் பரிசோதித்ததில் அதனிடம் ஒரு மோதிரமும் தங்கக் கடிகாரமும் சொற்ப பவுன்களும் இருந்தன. அவற்றையெல்லாம் அவர்கள் எடுத்துக்கொண்டு அப்பிரேதத்தினிடம் ஒருவனை நிறுத்தி வைத்துவிட்டு, மற்ற இருவரும் வேறோர் பக்கம் சென்றனர்.

அவர்களிருவரும் அங்குச்சென்று தங்கள் வலையை விசிறி இழுத்துப் பார்த்ததில் அவர்கள் அதிர்ஷ்டவசமாகச் சில நிமிஷங்களுக்குள் மற்றொரு பிரேதம் அகப்பட்டது. அதைக்கண்டதும் அவர்களுடைய சந்தோஷம் அளவிட முடியாததாய்விட்டது. அவர்கள் அப்பிரேதத்தையும் பரிசோதித்து அதன்மீதிருந்த இருமோதிரங்கள், தங்கக்கடிகாரம், சிலபவுன்கள் ஆகியவற்றைக் கைப்பற்றினர். ஆனால் அவர்கள் அப்பிரேதத்தைச் சோதித்தபோது சந்திரன் உபாயமாக பிரகாசித்துக்கொண் டிருந்தபடியால் அதன் முகத்தைக்கண்டு அவர்கள் அது, தங்களுக்குமுன்பு ஒரு முறை கூலிக்கு அமர்த்திக்கொண்ட குமாரவேல் பிரபுவின் பிரேதம் என்பதை அறிந்துகொண்டார்கள். உடனே அவர்களுக்கு ஆச்சரியம் தோன்றிற்று. பிரேதத்தின் தேகத்தி லிருந்து அப்போதும் இரத்தம் பீறிட்டு வெளிப்பட்டுக் கொண்டிருந்ததால் கொலை செய்யப்பட்டு ஒருமணி நேரத்துக்குள்ளாக இருக்கவேண்டுமென்றும் கருதினார்கள். ஆனால் அவர்கள் அப்பிரேதத்தை அங்கேயே வைத்துக்கொண்டு பேசிக்கொண்டிருக்க விரும்பவில்லை. ஆகவே அவர்கள் அதைக் கட்டடத்தின் பாலத்தின்கீழ் மறைவில் கொண்டு போய்வைத்தார்கள். அவர்கள் மற்றொருபிரேதம் யாருடையதென்று அறிய ஆவல்கொண்டவர்களாய் அப்பிரேதத்தையும் வெளியில் சந்திரன் வெளிச்சத்தில் இழுத்துப் பார்த்ததில் அது கர்னல் மாரப்பனுடையதென்பதை அறிந்து ஆச்சர்யமடைந்து அன்று இரவு அங்கு ஏதோ கொடுமையான கொலை நிகழ்ந்திருக்க வேண்டுமென்பதை அறிந்தார்கள்.

அப்போது அவர்களில் ஒருவன், "நாம் இருபதுநாள் இப்படியே நின்று யோசித்தாலும் யார் இப்படிப்பட்ட கொலையைச் செய்திருக்கவேண்டும் என்பதைக் கண்டுபிடிக்க

நம்மால் ஆகப்போவதில்லை. ஆனால் கொலை செய்தவர்களுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். ஏனெனின் நமக்கு அதிக பணத்தைத் தரத்தக்க இரு பிரேதங்கள் கிடைக்கும்படி அவர்கள் செய்தார்களல்லவா?'' என்றான். மற்றொருவன், ''உஸ், பேசாதீர்கள். யாரோ வரும் காலடிசத்தம் கேட்கின்றது'' என்றான். உடனே அவர்கள் மாரப்பனின் பிரேதத்தையும் இழுத்து மறைவில் விட்டுவிட்டு அவர்களும் ஓரமாக மறைந்து நின்று வருவது யார் என்று கவனித்துக்கொண்டிருந்தார்கள். நிலாவெளிச்சமும் உபாயமாகப் பிரகாசித்துக்கொண் டிருந்தபடியால் அங்கே ஒருமாது வருவது தெரிந்தது. உடனே வெறியன் மெல்லியகுரலில், ''அதோ அந்த மாது! இளவரசியின் மாளிகையைச் சேர்ந்தவள். நாம் அன்றிரவு தூக்கிச் சென்றோமல்லவா அவளே அவள்'' என்றான். அப்போது தொப்பன், ''ஓகோ! அப்படியானால் இக்கொலையில் அவள்தான் சம்பந்தப்பட் டிருக்கவேண்டும். நீயும் அப்படித்தான் நினைக்கிறாயோ?'' என்றான். அப்போது வெறியன், ''வீண் விவாதங்களெல்லாம் இப்போது நமக்கு வேண்டாம். நாம் அவளிடம் என்னசங்கதி என்று விசாரிப்போம்'' என்றான். அப்படியே அவர்களும் மறைந்திருந்த இடத்திலிருந்து வெளிப்பட்டு வந்து இராஜம்மாளைப் பார்த்தார்கள். அவளும் அவர்களிருவரும் இன்னாரென்பதை யறிந்துகொண்டு அவர்களிடம், அவள் அவர்களையே தேடிக்கொண்டு வந்ததாகத் தெரிவித்தாள். உடனே அவர்கள் என்னவேண்டுமென்று கேட்டார்கள். அவள் அவர்களுக்குப் பெரியதொரு தொகையை வெகுமதியளிப்பதாகவும் அவர்கள் தனக்காகச் செய்யவேண்டிய காரியம் இன்னதென்றும் தெரிவித்தாள். ஆனால் அது அந்த முரடர்கள் நினைத்தபடி சற்றுமுன் அவ்வேரிக்கரையில் நடந்த கொலைக்குச் சம்பந்தப்பட்டதாக இருக்கவில்லை. எனி

னும் அவர்கள் அதைப்பற்றி அவளிடம் பிரஸ்தாபிக்கவில்லை. அவளுக்கும் அவ்விஷயமே ஒன்றும் தெரியாது. ஆகவே இவ்விஷயத்தில் முரடர்கள் நினைத்தது தவருகும்.

இராஜாம்மாளும் அந்த முரடர்களும் சொற்ப நேரத்துக்குள் தங்கள் விஷயத்தைப்பேசி முடித்துவிட்டார்கள். குற்றம்செய்ய அமைவோரும், அவர்களை அமைக்க விரும்புவோரும் ஒரேமாதிரியான கொடிய சுபாவமுடையவர்களாய் இருந்துவிட்டால் அவர்களிடையே நடைபெறவேண்டிய காரியத்தை முடித்துவிடுவது மிகச் சுலபமாகும். இராஜம்மாள் அம்முரடர்கள் என்ன செய்யவேண்டுமென்பதுபற்றிய விவரத்தையெல்லாம் அவர்களிடம் கூறிவிட்டு மிக அவசரமாக இளவரசியின் மாளிகைக்குத் திரும்பினுள். அப்போது வழியில் அவள் தன்னுள், "ஆஹா! எத்தகைய அபாயமான முறையை நான் அனுஷ்டிக்கப்போகிறேன்! இதனுல் நானும் மிக்க அபாயத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறேன். என்றுலும் என்செய்வது? கொலையினுல்மட்டுமே நாங்கள் தப்பித்துக்கொள்ளலாம்போலிருக்கிறது" என்று நினைத்துக்கொண்டாள். இவ்வாறு சிந்தித்துக்கொண்டே அவள் மாளிகைக்குள் சென்ருள்.

நேயர்காள்! என்ன அக்கிரமம் பார்த்தீர்களா! ஏகநாயகிச் சீமாட்டியும் பெரியநாயகிச் சீமாட்டியும் தாங்கள் ஒரே காலத்தில் மனமாரக் காதலித்த கர்னல் மாரப்பனையும், குமாரவேல் பிரபுவையும் பழிவாங்க உத்தேசித்துக் கொன்றுவிட்டார்கள். அந்தோ! அன்புக்கும் அருளுக்கும் உறைவிடமாகிய தாய்மார்களான பெண்பாலரும் கொலைத்தொழிலில் இறங்குவதென்ருல் அதைவிடக் கேவலமான நாகரிகம் வேறென்ன இருக்கிறது? இக்காலத்தில் சிலரால் அத்தகைய மேல்நாட்டு நாகரிகம்தான் சிறந்ததென்றும் ஆன்ம பரிசுத்

தத்திலும் ஒழுக்கத்திலும் மேம்பட்ட கீழ்நாடுவாசிகளாகிய நாமும் அதைப்பற்றவேண்டுமென்றும் கூறுகின்றனர். இதனால் நம் நாகரிகமே சிறந்ததென்று நாம் கூறவில்லை. நம் நாகரிகத்தையும் காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப அபிவிருத்தி செய்துகொள்வதில் மேல்நாட்டு நாகரிகத்திலுள்ள நல்லனவற்றை எடுத்துக்கொள்ளவேண்டியதே. கேவலம் மேல்நாட்டு நாகரிகத்தை, அப்படியே பின்பற்றுவது நம்மை நாம் அழித்துக்கொள்வதற்கே வழியாகும். ஆனால் இங்கு நாம் கவனிக்கவேண்டிய வேறு சில விஷயங்களும் உள. அயோக்கிய சிகாமணிகளான குமாரவேல்பிரபுவும், கர்னல் மாரப்பனும் அவர்களை நம்பி அவர்களிடம் தங்கள் உயிர் போன்ற மானத்தையே ஒப்படைத்ததை அவர்கள் லட்சியம் செய்யாமல் அதை வெளிப்படுத்தியதுடன் பலவகைகளிலும் துரோகம் செய்தார்கள். துரோகிகள் எப்போதும் இத்தகைய கொடிய தண்டனையை அனுபவிக்கவே நேரிடும். ஆதலின் துரோகசிந்தனை மிகக் கெட்டதாகும்.

136 - வது அத்தியாயம்

மேற்படி கொலைநடந்த அன்றிரவே பதினொன்றரை மணிக்கு டாக்டர் மணவாளன் தன் விடுதியில் ஒரு ஹாலில் உட்கார்ந்திருந்தான். ஜகதீசன் தன் அறையில் உட்கார்ந்துகொண்டு தான் மேற்கொண்டுள்ள காரியங்களைப் பற்றியும், இனி எவ்வாறு தன் முயற்சிகளை நடத்தவேண்டுமென்பதுபற்றியும், இரவு பன்னிரண்டுமணிக்கு மூன்று சகோதரிகளும் வந்தால் அவர்களுடன் எவ்வாறு நடந்துகொள்வது என்பதுபற்றியும் சிந்தித்துக்கொண் டிருந்தான். ஏகநாயகியும் பெரியநாயகிச் சீமாட்டியும் தங்கள் அறைகளில்

படுக்கையின்மீது உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்குத் தூக்கம் வரவில்லை. ஏனெனின் மகா கொடிய காரியங்களைச் செய்துவிட்டவர்களுக்குத் தூக்கம்வருவது கஷ்டம். மேலும் அவர்கள் தாங்கள் இழைத்துவிட்ட கொடுமையைப்பற்றிப் பீதியடைந்து ஒன்றுந் தோன்றாதவர்களாய் எந்நேரத்தில் என்ன நிகழுமோ என்னும் அச்சத்துடன் திக்பிரமையடைந் திருந்தனர்.

நாம் தனியாக ஹாலில் உட்கார்ந்திருந்த டாக்டர் மண வாளன் என்ன செய்கிறான் என்பதைக் கவனிப்போம். அவன் அங்கே என்ன செய்துகொண்டிருந்தான்? அவன் உட்கார்ந்திருந்த நாற்காலியின் எதிரில் இருந்த மேஜையின் மீது "விஷம்" என்னும் லேபில் ஒட்டப்பட்ட புட்டி ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அந்த விஷபுட்டி ஏன் என்று நினைக் கிறீர்கள். அன்றுபகல் அவனிடம் இராஜம்மாள் பக்கத்து ஒட்டலில் இருந்துகொண்டு கட்டளை இட்டபடி செய்வதற் கேயாம். அவன் ஜகதீசனையும், பெரியநாயகிச் சீமாட்டியை யும் எப்படியாவது கொன்றுவிடுவதென்று தீர்மானித்தான். ஏனெனின் அவர்களிருவரும் இளவரசியின் மாளிகையில் இரங்கம்மாள் இரகசியமாகக் குழந்தையைப் பெற்றதையும், அப்பிரசவத்துக்கு டாக்டர் மணவாளன் துணைபுரிந்திருப் பதையும் அறிந்துவிட்டார்களல்லவா? அவர்களால் அச் செய்தி வெளிப்பட்டு விடுமாயின் தனக்குச் சர்க்காரால் கிடைக்கக்கூடிய கொடிய தண்டனைகளைப்பற்றி நினைக்கும் போது அவனது தேகமுழுதும் நடுங்கிற்று. அப்படிப்பட்ட கொடிய தண்டனையினின்றும் விலகிக்கொள்வதற்கு இவர்க ளைக் கொல்வதைத்தவிர வேறு வழியில்லை என்பதையும் இராஜம்மாள் நன்கு விளக்கிவிட்டாள். எனினும் இவர்களைக் கொல்லப்போகும் முயற்சியே வெளியாய்விட்டால் என்ன

செய்வதென்றும் அச்சம் ஒருபுறம் தோன்றிற்றென்றாலும் தன் சௌகரியத்தையொட்டி எப்படியாவது அவர்களைத் தீர்த்துவிடுவது என்று முடிவு செய்துவிட்டான்.

ஆனால் இத்தகைய கொலைபாதகமான வேலையை எவ்வாறு முடிப்பது என்பதிலேயே அவனுக்குப் பலகஷ்டங்கள் தோன்றின. ஏதேனும் தக்க பானவகையில் விஷத்தையும் ஊற்றிக் கொடுத்துவிடலாமென முதலில் நினைத்தான். ஆனால் தானாகவோ, அல்லது தன் ஆள்மூலமாகவோ அதை அவர்களாகக் கேட்காதபோது கொடுப்பதனால் அவர்கள் சந்தேகப்படுவார்களே என்னும் அச்சம் அதிகரித்துவிட்டது. அவர்கள் தங்களுக்கு அச்சமயத்தில் எத்தகையபானமும் வேண்டாமென மறுத்துவிடலாம்; அதை எங்கேனும் வைத்திருக்கும்போது வேறு யாரேனும் அருந்திவிட்டு எதிர்பாராத துக்க சம்பவங்கள் நேரிட்டுவிடலாம். ஆகவே அதைவிட்டு மறுநாள் விடியற்காலை அவர்கள் குடிக்கப்போகும் காபியில் விஷத்தை ஊற்றிக்கொடுத்துவிடலாம் என்று நினைத்தான். ஆனால் அதுவும் அவனுக்குச் சரிப்படவில்லை. ஏனெனின் காலையில் காபியில் அதைச்சேர்க்கச் சௌகரியம் ஏற்படாமல் போகலாம். மேலும், இரவிலேயே அக்காரியத்தை முடித்துவிடாமலிருக்கவும் அவன் விரும்பவில்லை. ஆகவே அவன் வேறுவிதமான முடிவுசெய்தான். அதாவது அவர்கள் தங்கள் அறையில் நன்றாகத் தூங்கிக்கொண்டிருக்கும்போது எப்படியாவது அவர்களுடைய அறைகளில்புகுந்து அவர்களின் வாயில் விஷத்தை ஊற்றிவிடுவது என்று தீர்மானித்தான். அந்தவிஷம் சிறிது நாக்கின்மீது பட்டாலும் போதும் உயிர் போய்விடுமென்பது நிச்சயம்.

அவன் இவ்வாறு நிச்சயித்துவிட்டு அந்த விஷபுட்டியை ஏதேனும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைக்க முயற்சித்த

போது தன் ஹாலிலிருந்த மணி மிக வேகமாக அடித்தது. தெருவில் யாரோ வந்திருக்கிறார்கள் என்பதை அறிந்தான். இராக்காலங்களில் ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குப்பின் யார் வந்தாலும் அவர்களை அவனே நேரில்போய் விசாரிப்பது வழக்கம். ஆகவே அவன் உடனேசென்று தெருக்கதவைத் திறந்தான். அவன் நினைத்தபடியே மூன்று முரடர்களும் ஒருவண்டியுடன் வந்திருந்தார்கள். அவர்களைக் கண்டதும் மணவாளன், "இன்றிரவு நீங்கள் இங்குவந்தது வருந்தத் தக்க விஷயமே. நான் இன்று பல முக்கியமான வேலைகளில் ஈடுபட்டிருக்கிறேன்" என்றான். அதற்கு வெறியன் மிக்க ஆத்திரத்துடன், "அப்படியானால் இப்போது என்னசெய்யச் சொல்கிறாய்? நாங்கள் இப்பிரேதங்களை மீண்டும் கொண்டு போய் ஏரியில் போட்டுவிட முடியாதே. எப்போது சரியான வேட்டை அகப்படுகிறதோ அப்போது அதைக் கொண்டு வந்து விடவேண்டியதுதானே எங்கள் கடமை" என்று பதி லளித்தான். அதைக்கேட்ட மணவாளன், "அப்படியானால் நீங்கள் இப்போது ஒன்றுக்கு மேற்பட்ட பிரேதங்களைக் கொண்டுவந்திருக்கிறீர்களோ?" என்று கேட்டான். அவர்க ளும், "ஆம்; புதிதாக இப்போது தான் கொலைசெய்யப்பட்ட இரு பிரேதங்களைக் கொண்டுவந்திருக்கிறோம்" என்று விடை கூறினர். உடனே மணவாளன், "அப்படியானால் தாமத மேன்! அவற்றை இப்படி வெளியில் வைத்துக்கொண்டிருப் பது ஆபத்தல்லவா! விரைவில் காரியத்தை முடித்துவிடுங் கள்" என்றான்.

அதைவிட அதிகமாக அவர்களுக்கொன்றும் சொல்ல வேண்டியதில்லை. அவர்கள் உடனே அவ்விரு பிரேதங்களை யும் முதலில் ஹாலுக்கு எடுத்துச்சென்று அங்கிருந்து டாக் டரின் ரசாயன அறைக்கு அதாவது முன்னரே பல பிரேதங்

கள் சேகரிக்கப்பட்டிருந்த அறைக்கு எடுத்துச்சென்றார்கள், மணவாளனும் அவர்களுக்கு வெளிச்சம் தெரியும்பொருட்டுச் சிறு கைவிளக்கைக் காண்பித்தான். அவ்வறையில் சென்றதும் விளக்கின் வெளிச்சத்தால் அங்கே வைக்கப்பட்டிருந்த சிசுவின் பிரேதத்தைக்கண்டதும் வெறியன், "ஆஹா! அந்தச் சிசுவின்பிரேதமும் இங்கேயே இருக்கிறதே" என்று ஆச்சரியத்துடன் கூறினான். அப்போது மணவாளன், "அநாவசியமாகப் பேசிக்கொண்டிருக்க இப்போது சந்தர்ப்பமில்லை. என்வீட்டில் இரண்டொரு விருந்தினர் தங்கியிருக்கிறார்கள்," என்று கூறினான். அதற்கு வெறியன், "சரி; அப்படியாயின் எங்களுக்குத் தரவேண்டிய பணத்தைக் கொடுத்துவிடு. நாங்கள் இதோ போய்விடுகிறோம்" என்றான். மணவாளனும் அப்படியே மிக அவசரமாக அவர்களுக்குப் பணத்தைக் கொடுத்தான். அந்த அவசரத்தில் அவன் உண்மையில் எவ்வளவு கொடுக்க நினைத்தானோ அதைவிட்ச் சிறிது அதிகமாகவே கொடுத்துவிட நேரிட்டது. அம்முரடர்களும் அகப்பட்டவரையிலும் சரி என்று எடுத்துக்கொண்டு போய்விட்டனர். மணவாளனும் வேலைக்காரனைக் கூப்பிட்டு பிரேதத்தை ஹாலிலிருந்து இழுத்துக்கொண்டுபோனதால் ஏற்பட்ட ஈரத்தைத் துடைத்துவிடும்படி கட்டளையிட்டான்.

இக்காரியங்களெல்லாம் முடிந்தபின்னர் ஜகதீசன் மாடியிலிருந்து கீழே இறங்கிவந்தான். அப்போது மணி பன்னிரண்டு ஆகையால் அம்மூன்று சகோதரிகளும் வருகிறார்களா என்பதைக் கவனிக்கவந்தான். வந்தயிடத்தில் மணவாளன் ஹாலில் இருப்பதையும், அவன் முகம் விகாரப்பட்டிருப்பதையும் கண்டான். ஆகவே அவன் "விசேஷம் ஏதேனும் நேர்ந்ததோ?" என்று கேட்டான். அதற்கு மணவாளன், "விசேஷமொன்றுமில்லை. அம்முரடர்கள் இரு

பிரேதங்களைக் கொண்டுவந்தார்கள். அவற்றை ரசாயன அறையில் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது'' என்றான். அதற்கு ஜகதீசனும், "ஆம்; வேறு என்ன செய்யமுடியும்? அவர்கள் அவற்றைக் கொண்டு வந்த பின் அவற்றைத் தக்கயிடத்தில் சேர்ப்பிக்கவேண்டியது அவசியம்தானே. இப்போது என்னிடம் அவ்வறையின் சாவியைக்கொடு'' என்றான். இளவரசியின் மாளிகையிலுள்ள மூன்று சகோதரிகளும் அப்போது அங்கு வரப்போகிறார்கள் என்பது பற்றிய சங்கதிகளொன்றும் அறியாத மணவாளன் திடுக்கிட்டு, "என்ன! இந்நேரத்திலா அந்த சாவி உனக்கு வேண்டும்'' என்று கேட்டான்.

அதற்கு நமது ஜகதீசன் உறுதியுடன், "ஆம்; சாவியை என்னிடம் கொடு. இன்று இரவு சில மனிதர்கள் இங்கே வரப்போகிறார்கள்,'' என்று கூறினான். ஜகதீசன் மனிதர்கள் என்று சொன்னதும் அதிகாரிகளே அங்கு வரப்போகிறார்களோ என்னும் அச்சத்தால் மணவாளன் நடுங்கினான். அவன் அச்சப்படுவதை ஜகதீசன் உணர்ந்துகொண்டு, "நீ கருதுகிறபடி அதிகாரிகள் யாரும் வரப்போவதில்லை. நீ என் இஷ்டப்படி நடந்துகொண்டால் உனக்கு எத்தகைய ஆபத்தும் வராது என்று நான் முன்னமே கூறியிருக்கிறேனல்லவா?'' என்றான். அதற்கு மணவாளனும், "ஆம், ஆம்; நீ அவ்வாறே உறுதிமொழி அளித்தாய்; ஆனால்—'' என்று சொல்வதற்குள் ஹாலிலிருந்த மணி அடித்தது. உடனே ஜகதீசன் அவசரத்துடன், "இதோ அவர்கள்தான் நான் குறிப்பிட்ட மனிதர்கள். அந்தச்சாவியை என்னிடம் கொடு. அவர்கள் சர்க்கார் அதிகாரிகள் அல்ல என்பதை வேண்டுமாயின் சத்தியம்செய்கிறேன். அவர்கள் இரங்கம்மாள், அம்புஜம், ஜானகி ஆகிய மூன்று சகோதரிகளேயொழிய வேறில்லை'' என்றான். அப்

போது மணவாளன், "ஓ, அப்படியானால் இதோ சாவியை எடுத்துக்கொள்" என்றுகூறிச் சிறிது தைரியமடைந்தான். அச்சமயம் ஜகதீசன் டாக்டரைப்பார்த்து," நீயும் என்னுடனேயே இருந்து இப்போது நடக்கப்போகிற விஷயங்களையெல்லாம் பார்த்து அதற்கு நீ சாட்சியாக இருக்கவேண்டும்," என்று கூறினான்.

பிறகு ஜகதீசன்சென்று தெருக்கதவைத் திறந்தான். அவன் எதிர்பார்த்தபடியே இரங்கம்மாள், அம்புஜம், ஜானகி ஆகிய மூவரும் தடிப்பான முகமூடிகள் அணிந்துகொண்டும், அதிக ஆடைகளால் தங்களை மறைத்துக்கொண்டும் மிக ஜாக்கிரதையாக அவ்விடம் வந்திருந்தார்கள். அவர்கள் ஹாலில் புகுந்ததும் ஜகதீசன் தெருக்கதவை உள்பக்கம் பூட்டிவிட்டு அவர்களைப்பார்த்து, "என்னைப் பின்தொடர்ந்து வாருங்கள்" என்று மிகக் கண்டிப்பாகச் சொன்னான். உடனே அவன் அங்கு மேஜைமீதிருந்த சிறு கைவிளக்கை எடுத்துக்கொண்டு முன்னே நடந்துசென்று ஒரு தனியறைக்கு அவர்களையழைத்துச்சென்று, "ஓ, மாதர்களே; நீங்கள் உங்கள் முகமூடியை எடுத்துவிடுங்கள். நான் எதிர்பார்க்கும் மாதர்கள்தானா என்பதை நான் அறியவேண்டும்" என்றான். அவன் மிக்க அதிகார தோரணையுடன் கூறிய அக்கட்டளையை மீறமுடியாமல் அவர்கள் தங்கள் முகமூடியைக் கழற்றினார்கள். ஜகதீசன் அவர்களை உற்றுநோக்கினான். அவன் முன்னமே அவர்களை அறிவானல்லவா? அவர்களுக்குப் பிரத்தியேகமான அழகைப் பகவான் அளித்திருந்தும் அச்சமயத்தில் அவர்கள் செய்த குற்றத்தின் காரணமாக அச்சத்தால் வெளுத்த முகத்துடன் தன் எதிரில் அவர்கள் நிற்பதைக்கண்டான். அவர்களைக் கண்டதும் மணவாளனுக்கும் சிறிது தைரியம் ஏற்பட்டது. அவர்கள் சர்க்கார் அதிகாரிகளல்லவென்பதால் தைரி

யம் ஏற்பட்டதேயொழிய இப்போது நடைபெறும் அபூர்வ நடைமுறைகளைக்கண்டு என்னுருமோ என்னும் அச்சம்மட்டும் அவனைவிட்டு நீங்கியபாடில்லை. அப்பெண்கள் மூவரும், இரவில் அந்நேரத்தில் தனியாக ஒரு அறையில் தங்கள் குற்றங்களையெல்லாம் நன்கு அறிந்த ஒருவன்முன் நின்றிருந்ததால் அவர்களும் அச்சத்தால் பீதியடைந்திருந்தனர்.

அச்சமயத்தில் ஜகதீசன் மிக்க தீரத்துடனும் உறுதியோடும், "இப்போது நடைபெறவேண்டிய காரியங்களையெல்லாம் விரைவாகவும் ஒழுங்காகவும் நடத்துவோம். உண்மையைக் கூறவேண்டுமாயின், நீங்கள் செய்திருக்கும் மிகக் கொடிய குற்றங்களை நீங்களே ஒப்புக்கொள்ளும்படி செய்ய வேண்டுமாயின் சாதாரணமாக அதைச் செய்யமுடியாதென்பதையும், மிக்க நெருக்கடியான நிலைமையில் உங்களை நிறுத்தினுல்தான் நீங்கள் அதை ஒப்புக்கொள்வீர்களென்பதையும் நான் அறிந்திருக்கிறேன். இதோ உங்கள் சம்பந்தமான விஷயங்களைச் சிறிதேனும் அறிந்திருக்கிற ஒருடாக்டர் இப்போது நடைபெறப்போகும் விஷயங்களுக்குச் சாட்சியாக இருக்கிருர். இப்போது நான் உங்களை ஒருபயங்கரமான அறைக்கு அழைத்துச் செல்லப்போகிறேன். நீங்கள் இப்போது எப்படிப்பட்ட பயங்கர நிலைமையையும் சமாளித்துக் கொள்ளக்கூடிய மனேதைரியத்தை அடையவேண்டும். நீங்கள் பயங்கரமான பலவிஷயங்களைப் பார்க்கலாம். ஆனுல் உங்கள் கவனமெல்லாம் ஒன்றின்மீதுதான் இருக்கவேண்டும்" என்ருன். அப்போது சகோதரிகளில் மூத்தவளாகிய இரங்கம்மாள் அச்சத்தால் நடுங்க மெதுவாக வாய்திறந்து, "நல்லது ஐயா, என்ன பயங்கரநிலைமைகள் எங்களுக்காக ஏற்படுத்தியிருக்கிருய்" என்று கூறிவிட்டு ஜகதீசனையே உற்று நோக்கினுள்.

அப்போது ஜகதீசன் சிறிதும் மனமிளகாமலும் அதை ரியமடையாமலும், "ஒகோ, நீங்கள் எவ்வளவுதான் தீயவர்கள் என்பதை நான் அறிந்திருக்கிறேனென்றாலும் உங்களை நான் காட்டிக்கொடுத்துவிடமாட்டேன். ஆனால் நீங்கள் உண்மையைச் சொல்லாவிட்டால் உங்களைச் சும்மாவிடமாட்டேன். ஆதலின் இப்போதேனும் உண்மையைச் சொல்லுங்கள். சுமார் மூன்று வாரங்களுக்குமுன் ஒருநாள் இரவு இதோ இந்த டாக்டரின் துணையைக்கொண்டு இளவரசியின் மாளிகையில் பிரசவித்தது யார்?" என்று கேட்டான். இரங்கம்மாள் ஏதோ பதில்சொல்ல முயன்றாளென்றாலும் அவள் நாக்கு அசையவில்லை. அவளால் ஒன்றும் பேசமுடியவில்லை. ஆதலின் ஜகதீசனை உற்று நோக்கியவண்ணம் மௌனமாக நின்றாள். உடனே ஜானகி ஒருவாறு சமாளித்துக் கொண்டு, "டாக்டர் மணவாளனையே கேட்பதுதானே. அன்றிரவு தான் யாருக்குத் துணைபுரிந்ததாக அவர் கருதுகிறார்" என்று கேட்டாள். அதற்கு ஜகதீசன் கோபத்துடன், "இல்லை. நான் இப்போது சந்தேகங்களை விசாரித்துக்கொண்டிருக்க விரும்பவில்லை. நிச்சயமான பதில் எனக்குவேண்டும். இது மிகவும் நெருக்கடியான விஷயம் என்பதை ஞாபகத்தில்வைத்துக்கொள்ளுங்கள். இந்தவிஷயம் எப்படி முடிகிறதென்பது உங்களையே பொருத்திருக்கிறதென்பதை மறக்கவேண்டாம்" என்றான்.

அப்போது இரங்கம்மாளின் பின்புறத்தில் அம்புஜம் நின்றுகொண்டு, "இதற்கெல்லாம் பயந்துவிடாமல் சமாளித்துக்கொள்" என்றாள். உண்மையில் இரங்கம்மாளும் ஒருவாறு சமாளித்துக்கொண்டு, எப்படியாவது இதற்கெல்லாம் பயப்படாமல் எந்த விஷயத்தையும் வெளியிடாமலிருந்தாலும் தங்களுக்கு ஏதும் ஆபத்து வாராதென்றும், அன்றிரவே

ஜகதீசனும், பெரியநாயகிச் சீமாட்டியும் கொல்லப்படுவார்க ளென்றும் நினைத்துக்கொண்டு அந்த தைரியத்தின்மேல் ஒன்றும் சொல்வதில்லையென்று முடிவுசெய்தாள். மேலும் அன்றிரவு மாளிகையில் பிரசவித்தது இளவரசிதான் என்னும் சந்தேகம் இன்னமும் இருக்கலாமென்றும், அதைத் தானாக ஒப்புக்கொள்வது அவ்வளவு சிறந்த வேலையல்ல என்றும் கருதினாள். இதையெல்லாம் முகக்குறியால் அறிந்துகொண்ட ஜகதீசன் இரங்கம்மாளையே நோக்கி, "இப்போது குழந்தையைப் பிரசவித்த விஷயமாய்க் கேட்டகேள்வி குறிப்பாக உனக்குத்தான் கேட்கப்பட்டது" என்றான். அப்போது இரங்கம்மாள் மிக்க தைரியத்துடன், "ஐயா, இது ஒரு பெண்ணின்மானம் சம்பந்தப்பட்ட விஷயமாக இருப்பதால் இதற்குப்பதில் அளிக்க நான் மறுக்கிறேன்" என்று கூறினாள்.

இதைக்கேட்டதும் ஜகதீசனுக்குக் கோபம் அதிகரித்து விட்டது. ஆகவே அவன் மிக்க அதிகார தோரணையில், "அப்படியானால், இப்போது நான் பிரஸ்தாபித்த குழந்தையின் பிரேதம் என்னிடம் இருக்கிறது. அதைப் பார்த்து அதன் எதிரில் நீங்கள் மூவரும் அதற்கும் உங்களுக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லையென்று தெய்வசாட்சியாகச் சத்தியம்செய்கிறீர்களா?" என்று அதட்டிக்கேட்டான். அதற்கு இரங்கம்மாள், "ஓ, நாங்கள் அவ்வாறே சத்தியம் செய்யத் தயாராயிருக்கிறோம்" என்று உறுதியுடன் அதைப்பற்றித் தனக்கொன்றும் தெரியாதவளேபோல் கூறினாள். உடனே ஜகதீசன், "அப்படியானால் வாருங்கள்; காரியம் எவ்வளவு சீக்கிரத்தில் முடிகிறதோ அவ்வளவும் நல்லது. டாக்டரே! விளக்கை எடுத்துக்கொண்டு வழி காட்டிக்கொண்டே முன்னே போ" என்றான். இவ்வாறு கூறிக்கொண்டே

அவன் அவ்வறையின் கதவைத்திறந்து ரசாயன அறைக்குச் செல்லும்படி கையால் காட்டினான். மணவாளனும் விளக்கை எடுத்துக்கொண்டு முன்னேபோனான். அவன் பின்னாலேயே போகும்படி அம்மாதர்களைக் கட்டளையிட்டான். அவர்களும் சென்றனர். அவர்கள் சிறிதும் அஞ்சாதவர்களேபோல் செல்வதைக் கண்டு ஆச்சர்யமடைந்தான். எனினும் அவர்களுடைய முகம் மட்டும் பீதியால் வெளுத்துப்போயிருந்தால் சவங்கள் நடப்பதேபோல் நடந்து சென்றார்கள். ரசாயன அறையின்முன் வந்ததும் ஜகதீசன் கதவைத் திறந்தானென்றாலும் மணவாளனையே முன்னே போகும்படி சொல்லிவிட்டு அவனுக்குப் பின்னால் அம்மாதர்களைப் போகும்படி சொன்னான். தான் பின்னால் நின்றுகொண்டு மூன்று சகோதரிகளின் அனுபவங்களைக் கூர்ந்து நோக்கிவந்தான். சகோதரிகள் மூவரும் அவ்வறையின் வாசற்படியில் காலைவைத்ததும், உள்ளே அடைபட்டுக் கிடக்கும் பிரேதங்களின் துர்நாற்றம் வீச, தங்களுக்குச் செயற்கையால் ஏற்பட்டிருந்த தைரியமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் மறையவும் அவர்கள் அச்சத்தால் ஒருவர்மீது ஒருவர் விழுந்து தள்ளாடினார்கள். அவர்களில் அம்புஜம் பலராமனின் வார்த்தையில் நம்பிக்கைகொண்டு சிறிது தைரியமடைந்திருப்பதால் அவளே முன்னர் ஆறுதலடைந்து தைரியம்பெற்று மற்ற இரு சகோதரிகளுக்கும் ஆறுதல் கூறினாள்.

இவ்வாறாக அவர்கள் மூவரும் தைரியமடைந்து அவ்வறையில் சென்றார்கள். ஜகதீசனும் அவர்களுக்குப் பின்னால் அறையில் சென்று அறையின் கதவை உள்பக்கம் தாளிட்டான். ஆ! அப்போது அந்த மூன்று யௌவன மாதர்கள் அடைந்த மனக்கலக்கத்தையும், பீதியையும், அதனால் அவர்கள் தேகம் நடுக்குறுவதையும் யாரால் வர்ணிக்க முடியும், துக்கம் ஒருபுறம்! ஆச்சர்யம் வேறொருபுறம்! அச்

சம் மற்றொருபுறம்! இவ்வாறாக மனங்கலங்கி நின்றார்கள். இரங்கம்மாளின் பார்வையெல்லாம் அங்குக்கிடந்த தன் குழந்தையின் பிரேதத்தின்மீது சென்றது. மற்ற இருவரின் பார்வையோ அதற்கப்பால் கிடந்த இருபெரிய பிரேதங்களின்மீது பாய்ந்தது. அம்புஜம் உடனே அங்கிருப்பது தன் பழைய காதலன் கர்னல் மாரப்பனுடைய பிரேதம் என்பதை அறிந்தாள். ஜானகியும் மற்றொரு பிரேதம் தன் ஆசை நாயகன் குமாரவேல் பிரபுவினுடையதே என்று தெரிந்துகொண்டாள். ஆகவே அவர்கள் மூவரும் தங்களுக்கும் தெரியாமலே ஏதோ உளறிக்கொண்டதுடன் சற்றுநேரத்துக்குள் மெய்மறந்து மயக்கமடைந்தார்கள். அம்புஜமும் ஜானகியும் அடைந்த அனுபவத்தைக்கண்டு ஜகதீசன், அந்த இரண்டு பெரிய பிரேதங்களும் கர்னல் மாரப்பன், குமாரவேல்பிரபு ஆகியவர்களுடையதாகத்தான் இருக்கவேண்டும் என்று நிச்சயித்தான். தான் எதிர்பாராமலே இவ்வாறு சந்தர்ப்பம் ஏற்பட்டது கண்டு ஜகதீசன் சந்தோஷமடைந்தான். அம்புஜமும் ஜானகியும் உளறியதிலிருந்து அவர்களுடைய காதலர்களாகவே மாரப்பனும் குமாரவேலும் இருந்திருக்கிறார்களென்று நிச்சயித்தான். அவர்கள் மயக்கமடைந்ததால் இரங்கம்மாளுக்கு யாரும் ஆறுதல் கூறுவார் இல்லாமற் போகவே அவள் அதிகபீதியடைந்து தனக்கும் தெரியாமலே ஏதேதோ உளறிக் கொட்டுகையில் அக்குழந்தையின் பிரேதம் அவளுடையதே என்று ஒப்புக்கொண்ட முறையில் பல விஷயங்களை வெளியிட்டாள். இதைத்தான் ஜகதீசனும் எதிர்பார்த்திருந்தானல்லவா? ஆகவே டாக்டர் மணவாளனைச் சாட்சியாக வைத்துக்கொண்டு அதைக் குறித்துக்கொண்டான்.

இதற்கிடையில் ஏகநாயகியும் பெரியநாயகிச் சீமாட்டியும் என்னசெய்கிறார்களென்பதைக் கவனிப்போம். அவர்

கள் அன்றிரவு முன்னேரத்தில் இழைத்த மிகக் கொடிய கொடுமையின் காரணமாக அவர்களுக்குத் தூக்கம்வரவில்லை. ஆகவே அவர்கள் இருவரும் ஒரு அறையில் உட்கார்ந்து கொண்டு இனி அவர்களுடைய நிலைமை என்னகுமோ என்பதுபற்றிச் சிந்தித்துக்கொண் டிருந்தார்கள். அந்நேரத்தில் திடீரென்று ஏதோ பயங்கரக்குரலும், கத்தலும், உளறலும் அவர்களுக்குக் கேட்டது. உடனே அவர்கள் அச்சத்தால் பீதியடைந்தனர். ஒருவரையொருவர் பார்த்தனர். அது இவர்களுக்குச் சம்பந்தமில்லாத கத்துதலாக இருந்தும் இவர்கள் அஞ்சவேண்டியதன் காரணமென்ன? இவர்களின் மனோநிலையேயன்றோ? குற்றமுள்ள நெஞ்சுதானே! அவர்கள் பூனை ஓடிய சத்தம் கேட்டிருந்தாலும் அச்சப்படவே செய்வர். மேலும் அவர்கள் மகா பயங்கரமான கொலையைச் செய்த கொலைபாதகிகளாதலின் அந்த ஆத்மாக்களே வந்து முறையிடுகின்றனவோ என்று அஞ்சி நடுக்கங்கொண்டு அவர்கள் உட்கார்ந்திருந்த ஆசனங்களினின்றும் எழுந்து அச்சத்தம் உண்டான திசையைநோக்கி ஓடினர். அச்சமயத்தில் கர்னல் மாரப்பன், குமாரவேல்பிரபு என்ற பெயர்கள் பயங்கரத்தொனியுடன் உச்சரிக்கப்பட்டதையும் கேட்டார்கள். அப்போது அவர்கள் எல்லையற்ற துக்கத்தையும் பீதியையும் அடைந்தார்கள். மேலும் அப்போது டாக்டர் மணவாளன் தன் வேலைக்காரனைக் கூப்பிட்டு ஜலம், பானம் முதலியவற்றைக் கொண்டுவரும்படி சொன்னதும், மணவாளனும் ஜகதீசனும் மூர்ச்சை யடைந்த பெண்களை வேறு ஹாலில் கொண்டுவந்து படுக்கவைத்தால் உண்டான சத்தங்களும் அம்மாதர்களின் காதில் விழுந்தது. இதனால் அப்பக்கத்தில் ஏதோ விசித்திரமான சம்பவங்கள் நடைபெற்றுக்கொண் டிருக்கின்றன என்பதை அறிந்தார்கள். ஆகவே அவர்கள் இருவரும் மாளிகையை விட்டிறங்கி ஹாலில் வந்தார்கள்.

அங்கே வந்தபோது எதிரில் இருந்த இரு அறைகளின் கதவுகளும் திறக்கப்பட்டிருப்பதைக் கண்டார்கள். முதலில் இருந்த அறை திறக்கப்பட்டிருப்பதைப் பெரியநாயகி எப்போதும் கண்டதில்லை. இரண்டாவது அறையில்தான் மணவாளனும் ஜகதீசனும் ஸ்மரணை தப்பியிருந்த பெண்களுக்குச் சிகிச்சை செய்துகொண்டிருந்தார்கள். ஆதலின் பெரியநாயகியும், ஏகநாயகியும் முதல் அறையில் செல்லவேண்டுமென்னும் ஆசையால் தூண்டப்பெற்று அங்கே சென்றார்கள்.

அங்கு டாக்டர் மணவாளன் மேஜைமீது வைத்துவிட்டுச் சென்ற மெழுகுவர்த்தி விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அதன் வெளிச்சத்தால் அம்மாதர்களிருவரும் அங்குள்ள பிரேதங்களைக் கண்டார்கள். அவர்களுக்கு இதர பிரேதங்களின்மீதோ, குழந்தையின் பிரேதத்தின்மீதோ கவனம் செல்லவில்லை. ஏனெனின் அவர்களுக்கு அதைப் பற்றியெல்லாம் ஒன்றும் தெரியாது. ஆனால் அவர்களுடைய முழு கவனமெல்லாம் அன்று இரவு முன்னேரத்திலேயே அங்கு கொண்டுவந்து போடப்பட்ட மாரப்பன், குமாரவேல் ஆகியவர்களின் பிரேதத்தின்மீதே பாய்ந்தது. அவற்றைக் கண்டதும் அவர்களுடைய தேகம் அச்சத்தால் நடுநடுங்கியது. எதைப்பேசவும் வாயெழவில்லை. திக்பிரமையுடன் அவற்றையே சிறிதுநேரம் நோக்கினார்கள். பிறகு அதைக்காண்பதில் வெறுப்படைந்து எப்படியாவது கிடக்கட்டுமென்று கருதி ஒருவரையொருவர் பார்த்துக்கொண்ட வண்ணம் அங்கிருந்து புறப்பட்டு மீண்டும் பழைய ஹாலுக்குள் வந்தார்கள். அப்படி வரும்போது அவர்கள் அடிக்கடி பின்பக்கம் திரும்பிப் பார்த்துக்கொண்டே வந்தார்கள். அதற்குக் காரணம் யாரோ ஆட்கள் தங்கள் பின்னால் வருவதுபோல் அவர்களுக்குத் தென்பட்டது.

மற்றொரு அறையில் மணவாளனும் ஜகதீசனும் அம்புஜம், ஜானகி ஆகிய இருவருக்கும் சிகிச்சை செய்துகொண்டிருந்ததுடன் ஜகதீசன் இரங்கம்மாளின் உளறலில் கவனம் செலுத்திவந்தபடியால் அக்கதவு திறக்கப்பட்டிருப்பதையும் அவர்கள் யாரும் கவனிக்கவில்லை. அந்த வாயிலின்வழியே பெரியநாயகியும் ஏகநாயகியும் சென்றபோது அவர்களுடைய காலடிச் சத்தமேனும் அவர்களின் ஆடைகள் அசைந்த சத்தமேனும் ஜகதீசனுக்கோ அல்லது மணவாளனுக்கோ கேட்கவில்லை. ஆகவே அவர்களிருவரும் அவ்வறையைத் தாராளமாகக் கடந்துசென்றார்கள். அவர்கள் நேராகக் கண்ட பயங்கர விஷயங்களால் மதிமயங்கியவர்களாய் தேகம் முழுதும் சோர்வுற்று தள்ளாடிக்கொண்டேபோய் எங்கேனும் விழுந்தால் போதுமென்று கருதினார்கள். ஆகவே அந்த ஹாலின் ஒரு மூலையிலிருந்த இரண்டு சாய்வு நாற்காலிகளில் அவ்விருவரும் மெய்மறந்து சாய்ந்தார்கள். அப்போது அவர்கள் ஒருவரையொருவர் பார்த்து, "இனி என்னசெய்வது?" என்று கேட்பதுபோல் ஜாடைகாட்டிக் கொண்டார்கள்.

பிறகு பெரியநாயகிச் சீமாட்டி மெதுவாக வாய்திறந்து, "ஏரி அதிலுள்ள பிரேதத்தை வெளிக்காட்டிவிட்டது. இது இனி ஆபத்தாகவே முடியும்போலிருக்கிறதே" என்றாள்.

ஏகநாயகி:—ஆம், ஆம்; ஆபத்துதான். நான் சிலமணி நேரங்களுக்குமுன் இரகசியமாகச் செய்தகாரியம் இப்போது வெளியாய்விடும்போ லிருக்கிறது.

பெரியநாயகி:—அத்தகைய கொடிய குற்றங்களுக்கு இங்கு என்னதண்டனை விதிக்கப்படும் என்பது உனக்குத் தெரியுமா?

அவர்கள் அவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் அங்கு மேஜையின்மீது வைக்கப்பட்டிருந்த விஷபுட்டியை பெரிய

நாயகி பார்த்து அதைக் கையில் எடுத்தாள். இதற்குள் அதை ஏகநாயகி பார்த்துவிட்டு, "ஆகா! அதை இப்படிக் கொடு. நான் இவ்வாழ்க்கையை வெறுக்கின்றேன். இவ்வுலகில் வாழ்ந்திருப்பதற்கே பயமாய் இருக்கின்றது" என்று கூறிக்கொண்டே அதைப் பெரியநாயகியின் கையிலிருந்து பிடுங்கிக்கொண்டு அதில் சிறிதைத் தன் உதட்டில் வைத்தாள்.

இதைக்கண்ட பெரியநாயகி, "எனக்கும் சிறிதுவை" என்று கூறிக்கொண்டே அதை வாங்கினாள். ஆனால் அவள் ஏகநாயகியைக் கவனித்தபோது ஏகநாயகி உடனே மயக்கம் தலைக்கேறிச் சாய்வு நாற்காலியில் சாய்ந்ததைக் கண்டாள். சொற்பநேரத்துக்கெல்லாம் அந்தோ! அழகிற் சிறந்த ஏகநாயகி எமனுலகம் சென்றாள். அந்த விஷத்தின் சக்தி அவ்வளவு கொடிது. வாசனையை இழுத்த மாத்திரத்தில் உயிர் போகும் தன்மையது. பார்த்தாள் பெரியநாயகிச் சீமாட்டி, எங்கேயும் மரணமாக இருக்கின்றது. அவளுக்கே ஒருவகையான அச்சம் மேலிட்டுவிட்டது. ஏரிக்கரையில் தங்களால் கொல்லப்பட்டவர்களின் பிரேதங்கள் ரசாயன அறையில் கிடக்கின்றன. அக்கொலைக்குக் காரணமாயிருந்த ஒருத்தி தன் எதிரிலேயே இறந்துகிடக்கின்றாள். ஆகவே தானும் மாய்த்துக் கொள்வதே சரி என்னும் எண்ணம் அவள் உள்ளத்தில் உதயமாய்விட்டது. பயங்கர எண்ணங்களால் அவள் பித்தம் பிடித்தவள்போலாகி மதிமயங்கி விஷபுட்டியைத் தன் வாயில் வைத்து ஓரளவு ஊற்றிக்கொண்டாள். அவ்வாறு ஊற்றிக் கொண்டதுதான் தாமதம்; மயக்கம் தலைக்கேறியது. தலை கீழே சாய்ந்தது; அவளும் உயிர்நீத்தாள். ஆடவர்களைக் கொலைசெய்த இருமாதர்களும் அவ்வாடவர்களின் பிரேதங்களைக் கண்டதும் தாங்களும் இவ்வுலகவாழ்வைத் துறப்பதே நலமெனக் கருதித் தற்கொலை புரிந்துகொண்டனர்.

இதற்கிடையில் இரங்கம்மாள் மதிமயக்கத்தால் கத்திக் கொண்டிருந்த சத்தம் அந்த வீடுமுழுதும் ஓவென்று கேட்டது. மாடியின்மீது படுத்திருந்த ஏகநாயகிச் சீமாட்டியின் வேலைக்காரியும் இச்சத்தத்தால் பயந்து எழுந்தாள். அவள் யாரென்று நினைக்கிறீர்கள்? ஏகநாயகியுடன் நீண்ட காலமாகத் தோழியாக இருந்து பற்பல தீயகாரியங்களுக்கும் அவளுக்கு உடந்தையாக இருந்தவளும், அழகிற் சிறந்தவளுமான ஜகதாளேயாவள். அவளைப்பற்றி வாசகர்கள் நன்கு அறிந்திருக்கிறீர்கள். ஒரு பெண்ணின் குரல் இவ்வாறு பயங்கரமாகக்கேட்டதால் அவள் பீதியடைந்து தன் படுக்கையை விட்டெழுந்து தன் ஆடைகளைச் சரிப்படுத்திக்கொண்டு மாளிகையைவிட்டு இறங்கி வந்தாள். அவள் சாப்பாட்டு அறைக்குச் சமீபத்தில் வந்ததும், அங்கிருந்து தான் சத்தம் வருகிறதென்பதை அறிந்து கதவின் ஓரத்தில் நின்று உற்றுக்கேட்டாள். அப்போது இரங்கம்மாள் அந்த ரசாயன அறையில் இருந்த குழந்தையின் பிரேதத்தைத் தானே பெற்றெடுத்ததாக ஒப்புக்கொண்டது அவள் காதில் கேட்டது. பிரேத சம்பந்தமான சொல் கேட்கவே ஜகதாள் அச்சத்தால் நடுங்கினாள்.

பயத்தால் அவள் நான்குபக்கமும் பார்க்கும்போது இதர அறைகளின் கதவுகளும் திறக்கப்பட்டிருப்பதைப் பார்த்தாள். ரசாயன அறையில் பார்த்தபோது பல மேஜைகளின்மீது ஏதேதோ கிடப்பது தெரியவே அவை என்னவென்று பார்க்கவேண்டுமென்னும் ஆவலுடன் அவ்வறையில் நுழைந்து பார்த்தாள். அங்கே அப்போது பிரஸ்தாபிக்கப்பட்ட குழந்தையின் பிரேதம் இருப்பதைக் கண்டாள். அதுமாத்திரமா! அங்கு மற்று மிரண்டு பெரிய பிரேதங்கள் இருப்பதையும், அவை, தன் எஜமானியின் விரோதியாகிய

மாரப்பன், கணவனுகிய குமாரவேல் ஆகிய இருவரின் பிரேதமாக இருப்பதையும் கண்டு ஆச்சரியமடைந்தாள். உடனே அவளுக்குத் தன் எஜமானனுன குமாரவேல் பிரபு ஒருநாள் இரவு தன்னையும் ஏமாற்றிக் கற்பைக் கெடுத்த விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. அப்படிப்பட்டவன் இப்போது பிரேதமாகக் கிடப்பது கண்டு உண்மையில் பயமும் துக்கமும் அடைந்தாள்.

ஆகவே ஜகதாள் அங்கே மனக்கலக்கத்துடன் சிறிது நேரம் நின்ருள். அன்று இரவு முன்னேரத்தில் அவளுடைய எஜமானியும், பெரியநாயகிச் சீமாட்டியும் சேர்ந்து ஏரிக்கரையில் இருவரைக் கொலை செய்த விஷயம் அவளுக்குத் தெரியாததலால், இப்பிரேதங்கள் இங்கே இருப்பதற்குக் காரணம் என்னமோ என்று சிறிதுநேரம் சிந்தித்துவிட்டு ஒன்றும் தோன்ருதவளாய் அங்கிருந்து புறப்பட்டு வெளியே வந்தாள். எங்கேபோவது என்னசெய்வது என்று தோன்ருமல் கால்போன இடத்தில்போக அங்குள்ள ஹாலின் ஒரு மூலைக்குச் சென்ருள். அங்கு அவள் தன் எஜமானி ஒரு சாய்வு நாற்காலியில் உயிரற்றுப் பிரேதமாகக் கிடப்பதையும், மற்ருேரிடத்தில் பெரியநாயகிச் சீமாட்டியும் அதே கதியை யடைந்து கிடப்பதையும் காணவே தனக்கும் தெரியாமல் ஓவென்று அலறிக்கூவினுள். இவ்வாறு கூவியதும் அவள் ஒன்றும் பேசாமல் மௌனமாகப் பிரேதங்களை உற்று நோக்கியவண்ணம் நின்றிருந்தாள். இதற்குள் அவள் கூவிய சத்தத்தைக்கேட்டு டாக்டர் மணவாளனும் ஜகதீசனும் தாங்கள் இருந்த அறையைவிட்டு வெளியில் ஓடிவந்தார்கள். வந்ததும் ஏகநாயகியும் பெரியநாயகியும் இறந்து கிடப்பதைக் கண்டு அவர்கள் ஆச்சரியமும் திகிலும் அடைந்தார்களென்று நாம் கூறவேண்டியதில்லை. ஆ! அது ஒரு பயங்கரமான இரவேயாகும். ஜகதீசன் முதலில் சமாளித்துக்கொண்டான்.

பிறகு அவனே டாக்டருக்கும் ஆறுதல் கூறினான். ஏகநாய கியும் பெரியநாயகியும் இவ்வாறு தற்கொலை செய்துகொண்டு இங்கு கிடப்பது அம்மூன்று சகோதரிகளுக்கும் தெரியக் கூடாதாதலால் உடனே அப்பிரேதங்களை அப்புறப்படுத்த வேண்டியதாயிருந்தது. ஆகவே ஜகதீசன் டாக்டருக்குத் தைரியமூட்டி, வீட்டு வேலைக்காரனைக் கூப்பிடும்படி சொன்னான். வேலைக்காரன் வந்ததும் அவனிடம், அதுவரை சிரித்துக்கொண்டும் மதிமயங்கிக் கூத்தாடிக்கொண்டுமிருந்த ஜகதாவை ஒப்படைத்து அவளை மாடிமீது அழைத்துச்சென்று ஒரு படுக்கையில் படுக்கவைக்கும்படி சொல்லிவிட்டு அவர்களிருவருமாகச்சேர்ந்து தற்கொலை செய்துகொண்ட அவ்விருமாதர்களின் பிரேதங்களையும் அப்புறப்படுத்தி மூடி வைத்துவிட்டு மீண்டும் மூன்று சகோதரிகளும் இருந்த அறைக்கு வந்தார்கள்.

இதற்கிடையில் அச்சகோதரிகளில் அம்புஜமும் ஜானகியும் ஒருவாறு தெளிவடைந்து தங்கள் நிலைமையை உணர்ந்து தங்கள் மூத்தசகோதரியான இரங்கம்மாளையும் தேற்றிக் கொண்டிருந்தார்கள். ஏனெனின் அவள் தெளிவடைந்தால் தான் தாங்கள் இனி நடக்கவேண்டிய வேலைகளைக் கவனிக்க முடியும். இரங்கம்மாளும் தன் சகோதரிகள் தேற்றிய முறையால் ஒருவாறு தெளிவடைந்திருந்தாள். ஆகவே ஜகதீசன் அவர்களை நோக்கி, "யௌவன மாதர்களே! இனி நீங்கள் இங்கு அதிகநேரம் இருக்கவேண்டியதில்லை" என்றான்.

இரங்கம்மாள்:—ஆனால் நாங்கள் இனி என்ன எதிர்பார்ப்பது? இனி நாங்கள் செய்யவேண்டியதுதான் என்ன?

ஜகதீசன்:—"நாளையதினம், நீங்கள் இவ்வூரைவிட்டுப் புறப்படத் தயாராக இருக்கவேண்டும். நான் சொல்வது

தெரிகிறதா? நாளையதினம் நீங்கள் மூவரும் இராஜம்மாளும் பரிதிபுரத்தைவிட்டுப் புறப்பட்டுவிட வேண்டியதுதான். நான் இப்போது ஒன்றும் அதிகம் சொல்லப் போவதில்லை. இன்று இவ்வளவுதூரம் இங்கு காரியங்கள் நடந்த பின்னரும் நீங்கள் எள்கட்டளைப்படி பேசாமல் இங்கேயே இருந்தால் என்ன ஆகும் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்.

அம்புஜம்:—"இல்லை, இல்லை. இப்போதே ஓடிப்போக ஏற்பாடு செய்கிறோம். இரங்கம்மாள்! ஜானகி! வாருங்கள். உடனே நேராக மாளிகைக்குப்போய் வெளியேற ஏற்பாடு செய்வோம்" என்றாள். ஏனெனின் அவள் நடு இரவில் மணவாளன் வீட்டிலிருந்து மாளிகைக்குத் திரும்பியதும் பலராமனுடைய அறைக்குச் செல்வதாக வாக்களித்திருக்கின்றாளன்றோ? ஆகவே அவனிடம் சென்றால் மற்ற விஷயங்கள் வெளியாகும் என்னும் எண்ணத்துடன் அவ்வாறு கூறினாள்.

அம்மூன்று சகோதரிகளும் அவ்வாறே போய்விடுவதாகக் கூறினார்கள். ஜகதீசனும் அவர்களுடன் வேறு ஒரு சொல்லும் பேசாமல் கையில் மெழுகுவர்த்தி விளக்கை எடுத்து அவர்களுக்கு வழிகாட்டினான். ஆனால் அவர்கள் அவ்வீட்டு வாயிற்படியைக் கடக்கும் சமயத்தில் அம்மூவரையும் நிறுத்தி வைத்துக்கொண்டு "அந்த ரசாயன அறையில் இருந்த வேறு இரு பெரிய பிரேதங்கள், வெறியன் முதலிய முரடர்களால் ரசாயன ஆராய்ச்சிக்காகக் கொண்டுவரப்பட்டது. அது இன்னாருடையதென்று எனக்கு முன்னரே தெரியாது. அவ்வாறு தெரிந்திருந்தால் நான் உங்களை அப்பரிதாபகரமான காட்சியைக்காண அழைத்துச் சென்றிருக்க மாட்டேன்" என்றான். பிறகு வாயில் கதவைத்திறந்தான்.

மூன்று சகோதரிகளும் நன்முக முகமூடியை அணிந்து கொண்டு பெரிய போர்வையை போர்த்திக்கொண்டு வெளி யில் புறப்பட்டார்கள். அப்போது அங்கே இருந்த மாதா கோயில் மணி அடித்தது. மூன்று சகோதரிகளும் ஆவ லுடன் மணியைக் கவனித்தார்கள். அப்போது பன்னி ரண்டே முக்கால் மணி என்பதை அறிந்தார்கள். இதனுல் அவர்கள் முக்கால் மணி நேரத்துக்கு மேலாகவே டாக்டர் மணவாளன் வீட்டில் பல திறப்பட்ட தேக மனோ சங்கடங் களுக்குட்பட்டார்கள் என்பதையும் அறிந்து கொண்டனர். அப்படிப்பட்ட சங்கடத்தினின்றும் விடுதலையடைந்து வெளி வந்ததற்காக ஒருவாறு சந்தோஷப்பட்டார்களென்றுலும் இரவில் நிச்சப்தமான அந்நேரத்தில் பயங்கரமான அச் சந்துகளின்வழியே போகவேண்டியிருப்பதற்காக அவர்கள் மனக்கலக்கமடைந்தார்கள். எனினும் விதியில்லாமல் நடக்க ஆரம்பித்தார்கள்.

அச்சகோதரிகள் மூவரையும் வெளியில் அனுப்பிவிட்ட பிறகு ஜகதீசன் டாக்டர் மணவாளனிடம் சென்று, "நான் இப்போது வெளியில்போய் இரண்டொரு மணிநேரத்தில் திரும்பி வந்து விடுகிறேன்" என்முன்.

அவன் வெளியில் போகிறுன் என்பதைக் கேட்டதும் தனக்கு என்ன ஆபத்து வந்துவிடுமோ என்னும் அச்சத் தால் மணவாளன், "வெளியிலா போகிருய்" என்று அச்சத் துடன் கேட்டான். அதற்கு ஜகதீசன், "அச்சப்படாதே; நிதானித்துக்கொள். நான் இன்னும் இரண்டொரு மணி நேரத்தில் அதாவது நாளை விடியற்காலை ஜனங்கள் எழுந்து நடமாடுவதற்குள் திரும்பி வந்து விடுவேன். நான் இதுவரை எக்காலத்தும் பார்க்காதவகையில் அவ்வளவு பயங்கரமான விஷயங்களெல்லாம் நேரிட்டு விட்டன. இனியும் இத்

தகைய பயங்கரங்களை நாம் பார்க்காதபடி செய்யவேண்டு மென்று இறைவனைப் பிரார்த்திப்போமாக. இப்போது நாம் செய்யவேண்டிய கடமை தெளிவாக இருக்கிறது. நாளை காலை போலீஸ் கோர்ட் திறந்ததும் நாம் அங்குபோய் எல்லா விஷயங்களையும் தெரிவித்துவிட வேண்டும்'' என்று கூறி ஞன்.

உடனே மணவாளன் இன்னும் அதிக அச்சங்கொண்டு, "எல்லா விஷயங்களையுமா?'' என்று கேட்டான்.

அப்போது ஜகதீசன், "நான் உன்னை எப்படிப்பட்ட ஆபத்தினின்றும் காப்பாற்றுவேன் என்று முன்னதாகவே வாக்குறுதி அளித்திருப்பதை நம்பு. நான் என் உறுதி மொழியினின்றும் சிறிதும் தவறமாட்டேன்'' என்று கூறித் தேற்றினன். உடனே அவன் தன் அங்கிகளை அணிந்து கொண்டு வைத்தியர் வீட்டினின்றும் வெளியில் புறப்பட் டான்.

இதற்கிடையில் மூன்று சகோதரிகளும் மிக அவசா மாக மாளிகைக்குச் சென்றுகொண் டிருந்தார்கள். அம்பு ஜம், தனக்கும் பலராமனுக்கும் இடையில் நேர்ந்த விஷயங்க ளால் பலராமன் தன்னைக் காப்பாற்றுவான் என்னும் தைரிய முடையவளா யிருந்ததால் மற்ற சகோதரிகளைவிட அவளே சிறிது தைரியமுள்ளவள்போல் காணப்பட்டாள். அவள் தனக்கும் பலராமனுக்கும் இடையில் நடந்த விஷயங்களில் எவ்வளவுதூரம் தன் சகோதரிகளிடம் கூறலாமோ அவ்வள வையும் சொல்லித் தேற்றினுள். இப்போது பரிதிபுரம் விட்டுப் போய்விடும்படி தானே ஜகதீசன் கட்டளை யிட்டா னென்றும், அதைவிடக் கொடியதண்டனை கிடைக்காதென் றும், இப்போது ஜகதீசன் இட்ட கட்டளையையும் மாற்றி விடும்படி செய்யலாமென்றும் தான் பலராமனிடம் கொண் டுள்ள நம்பிக்கையால் கூறினுள்.

இவ்வாறு இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் மூத்த சகோதரியாகிய இரங்கம்மாளுக்குத் தன்னிடம் இராஜம்மாள், "ஜகதீசனும் பெரியநாயகியும் பிழைக்கலாமென்று நீ கருதினல் அதை எப்படியாவது டாக்டர் மணவாளனுக்குத் தெரிவித்துவிடு. ஆனல் அவர்களிருவரும் சாகவேண்டியதுதான் என்று தோன்றினல் டாக்டரிடம் ஒன்றும் தெரிவிக்காதே. அவன் வேலையைத் தீர்த்துவிடுவான்" என்று சொன்ன விஷயம் ஞாபகத்துக்கு வரவே அவள் மணவாளனிடம் ஒன்றும் சொல்லாமல் வந்துவிட்டபடியால் இதற்குள் அங்கு என்ன ஆகியிருக்குமோ என்று நினைக்கவே அச்சத்தால் அவள்தேகம் முழுதும் நடுங்கியது.

ஆ! பெரியநாயகிச் சீமாட்டி முன்னரே விஷத்தை உட்கொண்டு மாய்ந்தாள் என்பதையும், மணவாளன் இனியும் குற்றம் செய்வதென்னும் எண்ணத்தை விடுத்துச் செய்த குற்றத்தையே மறைக்க முயன்று வருகிறுன் என்பதையும் இரங்கம்மாள் அறிந்திருந்தால் இவ்வளவு அச்சப்படவும், அதனல் அவள்தேகம் நடுங்கவும் வேண்டிய அவசியம் ஏற்பட்டிராது. ஆயினும் இதையெல்லாம் அவள் அறியாளாதலால் அச்சம் மேலிடவே மௌனம் சாதித்து ஒன்றும் பேசாமலிருந்தாள். அவர்கள் மூவரும் இரவில் நடந்து சென்றபடியால் இரங்கம்மாள் முகத்தில் தோன்றிய அச்சக் குறிகளையும் அவர்கள் அறிந்துகொள்ள முடியவில்லை.

137 - வது அத்தியாயம்

இப்போது நமது வாசகர்களுக்குச் சில விஷயங்களை ஞாபக மூட்டவேண்டியது அவசியமாக யிருக்கிறது. அதாவது பலராமன் அன்று இரவு மற்றவர்களுடன் மாளிகையில் சாப்பிடாமல் பரிதிபுரநகரில் யாரோ நண்பருடன் விருந்து சாப்பிடச்சென்றதாக மேலே அறிவித்திருக்கிறோமல்லவா? உண்மையில் அவன் அப்போது எந்த நண்பர் வீட்டு விருந்துக்கும் செல்லவில்லை. ஆனால் அவன் நேராக டாக்டர் மணவாளன் வீட்டுக்குச்சென்று ஜகதீசனைச் சந்தித்துத் தான் வண்ணாத்தி சுவர்ணத்தினிடம்பேசி அவளிடமிருந்து கிரகித்த ஆச்சர்யமான விஷயங்களையும், தான் ஏரிக்கரையில் மூன்று சகோதரிகளையும் சந்தித்து அவர்களுடன் பேசிய விவரங்களையும், தானும் அம்புஜமும் மட்டும் தனியாக வேண்டுமென்றே விடப்பட்டபோது தனக்கும் அம்புஜத்துக்கு மிடையில் நடந்த விஷயங்களையும் விஸ்தாரமாகச் சொல்லிவிட்டு ஜகதீசன் நடுராத்திரியில் மணவாளன் வீட்டில் மூன்று சகோதரிகளையும் சந்தித்த பின்னர் நேராக மாளிகைக்கு வரவேண்டுமென்றும் தெரிவித்து விட்டுச் சென்றான்.

அந்த ஏற்பாட்டின்படி தான் ஜகதீசனும் மணவாளன் உத்தரவு பெற்றுக்கொண்டு வெளியில் புறப்பட்டான். அவனும் அச் சகோதரிகள் மூவரும் சென்றவழியே சென்றானென்றாலும் சிறிது வேகமாக நடந்தபடியாலும், இருட்டில் அவர்களுக்குத் தெரியாமல் மறைந்து நடந்தபடியாலும், அவன் அவர்களைவிட முன்னதாகவே மாளிகை சென்று சேர்ந்தான். அவன் பிரத்யேக வாயிலுக்கருகில் சென்று

அதை மூன்றுமுறை தட்டியதும் பலராமனே கதவைத்திறந்தான். ஜகதீசன் வருவானென எதிர்பார்த்து அரைமணிநேரமாகப் பலராமன் அங்கே காத்திருந்தான். பலராமனைக்கண்டதும் ஜகதீசன் அன்றிரவு மணவாளன்வீட்டில் நடந்த விஷயங்களையெல்லாம் சுருக்கமாகத்தெரிவித்து பெரியநாயகி, ஏகநாயகி ஆகியவர்களுக்கு ஏற்பட்ட கதியையும் தெரிவித்தான் இதைக்கேட்டுப் பலராமன் பயமும் பீதியும் அடைந்தான். ஆனால் அதிகமாகப் பேசச்சந்தர்ப்ப மில்லாமையால் பலராமன் ஜகதீசனை மாளிகையினுள் அழைத்துச் சென்றான். பின்புறப் படிக்கட்டுகளின் வழியே பலராமன் ஜகதீசனை மாடிமீதுள்ள தன் அறைக்கு அழைத்துச் சென்றான்.

அவ்வறையில் நுழைந்ததும் ஜகதீசன் தன் அங்கியை அப்புறப்படுத்திவிட்டு, "நாம் செய்துகொண்ட ஏற்பாட்டின் படியே இதோ நான் வந்துவிட்டேன். ஆனால் சில மணிநேரத்துக்குமுன் மணவாளன் வீட்டில் நடந்த விஷயங்களைக் கவனித்தால் அம்புஜம் இப்போது, தான் முன்பு உன்னிடம் வாக்குறுதியளித்தபடி நடக்கச் சாத்தியப்படுமா என்பதே சந்தேகமாக இருக்கிறது," என்று கூறினான்.

பலராமன்:—அச்சகோதரிகளின் மனோநிலையை அறிந்துதான் நீ அவர்களை அதிகமான நெருக்கடியில் சிக்கவைக்கவில்லையென்று இப்போது தோட்டத்தில் சொன்னாயே! ஆதலால் அவர்கள் அவ்வளவு அச்சப்படவேண்டிய காரணமென்ன?

ஜகதீசன்:—ஆம்; உண்மைதான். ஆனால் அம்புஜம், கொல்லப்பட்ட தன் காதலனின் பிரேதத்தைக் கண்டதும்.

பல:—அவர்கள் கொல்லப்பட்டார்களென்று சொல்கிறாய்? உனக்கெப்படித் தெரியும்?

ஜக:—ஆம்; கர்னல் மாரப்பனும் குமாரவேல் பிரபுவும் கொல்லப்பட்டார்களென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அவர்களுடைய தேகத்தில் பலத்த காயம்பட்டிருந்தது. ஆ! பெரியநாயகியும் ஏகநாயகியும் தற்கொலை செய்து கொண்டதை நோக்கினால் அவர்களே அந்த இரு ஆடவர்களின் கொலைக்குக் காரணமோ என்று நினைக்க இடமிருக்கிறதல்லவா?

23 1981

பலராமன்:—ஐயோ, கடவுளே! நாம் ஈடுபட்டிருக்கும் இவ்விஷயத்தில் எவ்வளவு பயங்கரமான சம்பவங்களெல்லாம் நடக்கின்றன! ஆனால் தன் காதலன் கொலையுண்டதை யறிந்ததும் அம்புஜம் அதிக துக்கமடைந்தாளோ?

ஜக:—துக்கமும் அதைவிட அதிகமாகப் பீதியும் அடைந்தாள். அதனால் அச்சகோதரிகளுக்குள் அவள் தான் முதலில் தேறுத லடைந்ததையும் நான் பார்த்தேன்.

பல:—அப்படியானால் அவள் என்னிடம் கூறியபடி இன்றிரவு இங்கே வருவாள் என்பதில் ஆட்சேபமில்லை.

ஜக:—நீ நம்பிக்கையுடன் கூறுகின்றாய். அப்படியே நடப்பதாக வைத்துக்கொள்வோம். இப்போது நடைபெற வேண்டிய காரியம் நடந்துவிட்டால் பெரும்பாலும் நமது காரியம் முடிந்து விட்டதாகவே கருதவேண்டும். நான் முன்னமே தோட்டத்தில் தெரிவித்தபடி மணவாளன் வீட்டில் இரங்கம்மாள் தானே அக்குழந்தையின் தாய் என்று ஒப்புக்கொண்டு விட்டாள். மேலும் அவள் தன் ஊரில் இளவரசியைப்போல் நடித்ததெல்லாம் தன் சகோதரிகளே என்றும் தெரிவித்து விட்டாள்.

பல:—ஆ! என்ன சூழ்ச்சி; பயங்கரமான சூழ்ச்சிகளை யெல்லாம் அப்பெண்கள் செய்திருக்கிறார்களே! அதைக் கேட்கும்போதே ஆத்திரமாக இல்லையா?

ஜக:—அவர்கள் எவ்வளவுதான் இரகசியமாக என்ன சூழ்ச்சிகள் செய்தாலும் அவற்றை நாம் கண்டு பிடித்து விட்டோம் என்னும் பெருமைதான் நமக்கு இருக்கட்டுமே. இப்போது நாம் கடைசி முடியைத்தான் அவிழ்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதாவது அம்புஜம் உன்னைப்போல் வேடமணிந்து வந்துவிட்டால் எல்லாம் முடிந்துவிட்ட மாதிரியே.

பல:—அவள் வருவாளென்று நிச்சயமாக நான் நம்புகிறேன். ஏனெனின், என்னிடம் அவளுக்கு அவ்வளவு மோகம் ஏற்பட்டிருக்கிறது. ஆ! நான் என்னசொல்வேன்! ஜகதீசா! அவளுடைய சாகசத்தின் சக்தியே சக்தி! நான் ஒருகாலும் இவ்வாறு பெண்கள் கையில் அகப்பட்டுக்கொண்டதே இல்லை. நானும் அவளிடம் அன்புள்ளவனேபோல் நடந்துகொள்ள வேண்டியிருந்ததை நான் உண்மையில் வெறுக்கின்றேன். அவள் உண்மையிலேயே மிக்க அழகுள்ளவளாயும், யௌவனமாயும் இருந்ததால் அவள் என் சரீரத்தைத் தொட்ட மாத்திரத்தில் உண்மையிலேயே ஒருவகை மின்சார சக்தி என் தேகத்தில் பாவியதுபோல் இருந்தது. ஆகவே நான் சிறிது சரசசல்லாபங்களுக்கு இடங்கொடுத்தேனென்றாலும் ஏதோ ஒரு பெரியகுற்றம் செய்கிறேன் என்பதை உணர்ந்துகொண்டே யிருந்தேன். அதுமட்டுமே. என்னை ஆலிங்கனம்செய்துகொள்ளும்படி அவளை அனுமதித்தபோது ஆ! நான் பட்டபாடு யாருக்குத் தெரியும். எனினும் கண்ணியம் மிக்க, கற்புவாய்ந்த

நமது இளவரசியைப் பாதுகாக்க வேண்டுமென்னும் ஆவல் எனக்கு அதிகமாயிருந்தபடியால் அதையொட்டி என்ன கஷ்டங்களோ, அதிருப்தியான காரியங்களோ நேர்ந்தாலும் அதைப் பொறுமையுடன் ஏற்றுக்கொள்வதென நிச்சயித்தேன். அதை யொட்டியே நான் என் ஆண் தன்மைக்கு விரோதமாகக் கேவலம் ஒரு பெண்ணின் இஷ்டப்படியெல்லாம் ஆடவும் சம்மதித்தேன். இந்த என் எண்ணத்தை நீ அறியவேண்டும். அம்புஜம் அதிக காம உணர்ச்சிபெற்றவள் என்பதை நீயும் நானும் அறிந்திருக்கிறோம். இதைக்கொண்டுதான் அவள் நிச்சயமாக இங்கு வருவாளென்று நான் நம்புகிறேன். ஏனெனின் அவள் தன் காமவிகாரத்தின் மிகுதியால் இப்போது நடந்த விஷயங்களையெல்லாம் மறந்துவிட்டு என்னுடன் இன்பம் அனுபவிக்கவேண்டுமென்னும் ஆவலால் என்னிடம் கூறியபடி என்னைப்போல் வேடமணிந்துகொண்டு வருவாள் என்பது திண்ணம்.

ஜக:—"சரி; நாம் பார்ப்போம். இரவோ அதிக நேரமாய் விட்டது. அச்சகோதரிகள் மூவரும் மாளிகைக்குத் திரும்பிவிட்டிருப்பார்கள். அம்புஜம் உன் அறைக்கு வருவதாக இருந்தால் இன்னும் சற்றுநேரத்துக்குள் வந்துவிடவேண்டும். ஆகவே இன்னும் சற்றுநேரம் காத்திருந்து பார்த்தால் எல்லாம் தெரிந்துவிடுகிறது.

பலராமன் சொன்னது சரியாய்விட்டது. அம்புஜம் டாக்டர் மணவாளன் வீட்டிலிருந்து மாளிகைக்குத் திரும்பி வரும் வழியிலேயே தான் மாளிகைக்குச் சென்றதும் பலராமன் அறைக்குச் செல்லவேண்டுமென்றும், இன்னின்ன விதமாக இன்பங்களை அனுபவிக்க வேண்டுமென்றும் பல வாறாகச் சிந்தித்துக்கொண்டே வந்தாள். அன்றிரவில் தூக்

கம் அனுபவித்த நேரமெல்லாம் கழிந்துவிட்டதென்றும், இனி இன்பம் அனுபவிக்க வேண்டியகாலம் நெருங்கிவிட்டதென்றும் நினைத்துச் சந்தோஷமடைந்தாள். இவ்வாறு சிந்தித்துக்கொண்டே நடந்து வருகையில் மாளிகையும் வந்துவிட்டது. மூன்று சகோதரிகளும் இரகசியமாக யாருக்கும் தெரியாமல் பின்புற வாசலின்வழியாக மாளிகையில் நுழைந்தார்கள். மாளிகையில் நுழைந்ததும் மூன்று சகோதரிகளும் தனித்தனியே பிரிந்து அவரவர் அறைகளுக்குச் சென்றார்கள். ஆனால் இரங்கம்மாள் மட்டும் முன் ஏற்பாட்டின்படி இராஜம்மாளின் அறைக்குச் சென்றாள். அங்கே மகா கொடிய அம்மாது இரங்கம்மாளுடைய வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். அந்த அறையின் ஒரு மூலையில் ஒரு திரை கட்டப்பட்டிருந்தது. இரங்கம்மாள் அவ்வறையில் நுழைந்ததும் இராஜம்மாள் தன் விரலால் அத்திரையைச் சுட்டிக்காட்டினாள். அத்திரையின் மறைவில் வெறியன், தொம்பன், தொப்பன் ஆகிய மூன்று முரடர்களும் ஒளிந்திருக்கவேண்டுமென்று அவள் யூகித்தறிந்துகொண்டதால், அவள் தேகம் முழுதும் அச்சத்தால் நடுநடுங்கிற்று.

அப்போது ராஜம்மாள் இரங்கம்மாளைப் பார்த்து, "டாக்டர் மணவாளன் வீட்டில் நடந்த விஷயங்களை எவ்வளவு சுருக்கமாகச் சொல்லமுடியுமோ அவ்வளவு சுருக்கமாகச் சொல்; பார்ப்போம்" என்றாள்.

இரங்கம்மாள் அம்மாதின் அருகில் ஒரு நாற்காலியில் அமர்ந்துகொண்டு மணவாளன் வீட்டில் சகோதரிகளாகிய தாங்கள் மூவரும் அனுபவித்த கஷ்டங்களையும் கண்ட பயங்கர விஷயங்களையும் விஸ்தாரமாகத் தெரிவித்தாள். டாக்டரின் ரசாயன அறையில் மேஜையின்மீது குமாரவேல் பிரபு கர்னல் மாரப்பன் ஆகியவர்களின் பிரேதங்கள் கிடத்

தப்பட் டிருந்ததைக் கூற மறக்கவில்லை. இதைக்கேட்டதும் ராஜம்மாள், ஆச்சர்யமும் திக்பிரமையும் அடைந்தாள். ஆயினும் அவள் அதைப்பற்றி அதிக கவலை செலுத்தாமல், "ரங்கம்மாள்! உங்களுடைய விஷயம் இப்போது எவ்வளவு தூரத்தில் இருக்கிறது, நீ வரும்போது டாக்டர் மணவாளனிடம் என்ன சொல்லிவிட்டு வந்தாய்?" என்று கேட்டாள்.

இரங்கம்மாள்:—நான் ஒன்றும் சொல்லவில்லை நான் அச்சத்தாலும் பீதியாலும் ஏதேதோ உளறிக்கொண் டிருந்தேன். ஆகவே, என்னை நான் தேற்றிக்கொண்டு வெளி வருவதே கஷ்டமாய்ப் போய்விட்டது. இந்த நிலைமையில் ஜகதீசன் பெரியநாயகிச் சீமாட்டி ஆகியவர்களின் உயிர் என் கையில் இருக்கிறது என்பதை மறந்துவிட்டேன்.

ராஜம்மாள்:—சரி, எல்லாம் நன்மைக்கு தான். நாம் அவ்விருவரின் தயவில் இருக்கவேண்டிய அவசியமில்லாதபடி அவர்கள் இறந்து விடுவதே நலம். நீ மணவாளனிடம் ஒன்றும் சொல்லாமல் வந்துவிட்டபடியால் அவன் தன் வேலையை முடித்து விடுவான். ஆகவே இப்போது நான் என் வேலையை முடிக்கவேண்டும்.

இரங்:—அப்படியானால் நீ உன் காரியத்தை முடித்து விடுவதென நிச்சயித்து விட்டாயா?

ராஜம்:—ஜகதீசனும் பெரியநாயகிச் சீமாட்டியும் அன்றிரவு மணவாளன் வீட்டில் இறப்பது என்று இருக்கும் போது பலராமனை மட்டும் எப்படி உயிருடன் விட முடியும்?

இராஜம்மாளின் வார்த்தையைக்கேட்டு இரங்கம்மாள் ஒன்றும் பேசாமல் திடுக்கிட்டுப்போய் சிறிதுநேரம் மௌனத்துடன் நின்று கொண்டு ராஜம்மாளின் மனோ உறுதியையும்

எப்படி அந்த மாளிகையில் அன்றிரவு ஒரு கொலைசெய்ய முடியு மென்பதையும் பற்றிச் சிந்தித்துக்கொண் டிருந்தாள்.

"அப்போது ராஜம்மாள் அவளைப்பார்த்து நீ உன் அறைக்குப்போ. இன்னும் அரைமணி நேரத்திற்குள் எல்லா வேலையும் முடிந்துவிடும்'' என்று கூறினாள்.

ஆனால் இரங்கம்மாள் அப்போதும் பேசாமல் மௌனத்துடன் நின்றுகொண் டிருந்தாள். அவள் ஓவென்று வாய்விட்டு அலறி அழுதுவிடலாமா என்று நினைத்த வண்ணம் அவ்வளவு துக்கத்துடனும் பயத்துடனும் இருந்தாள். இராஜம்மாள் அவளை மெதுவாகக் கதவின்பக்கம் தள்ளினாள். ஆகவே அவள் அவ்வறையைவிட்டுத் தன் அறைக்குத் தனியாகச்சென்று உள்பக்கம் தாளிட்டுக்கொண்டு ஒரு படுக்கையில் விழுந்து புரண்டுகொண் டிருந்தாள். அப்போது அவள் கண்ணீர் ஆறுகப் பெருகும்படித் தன் துக்கத்தை யெல்லாம் அழுது தீர்த்துக்கொண்டாள்.

இதற்கிடையில் அம்புஜம் மாளிகைக்கு வந்ததும் நேராகத் தன் அறைக்குச்சென்று தன் ஆடைகளைக் களைந்துவிட்டுத் தன்னிடம் இருந்த பலராமனுடைய ஆடைகளை அணிந்து கொண்டாள். ஒரு யௌவனமாது பெண்களுக்குரிய ஆடைகளைக் களைந்துவிட்டு மிக்க அவசரமாகவும் சந்தோஷமாகவும் ஒரு ஆடவனுடைய ஆடையை அணிவதை யாரேனும் கண்டால் அவள் சற்று நேரத்துக்குமுன் அவ்வளவு பயங்கரமான அனுபவங்களைப் பெற்றாள் என்று யாரும் கூறமாட்டார்கள். அவள் முகத்தில் தான் மணவாளன் வீட்டில் அடைந்த துக்கம், பயம், ஆச்சர்யம் ஆகியவற்றின் குறி ஒன்றுமே காணப்படவில்லை. அதற்குப் பதிலாக அவள் முகத்தில் ஒருவித ஆனந்தக்குறியே காணப்பட்டது. சதா புன் சிரிப்பு அடைந்து கொண்டே யிருந்தாள்.

இதுவரை அடைந்த துக்கத்தையும் பயத்தையும் மறந்து இனி விரைவில் அடையப்போகும் இன்பத்தைப் பற்றிய ஞாபகமே அவளுக்கு அதிகமாயிருந்தது. அவள் பலராமனைப்போல் வேடமணிந்துகொண்டவிதம் மிக விசித்திரமானது. அதைமட்டும் ஒரு அத்தியாயமாக எழுதலாம். ஒரு ஆடவன் ஒரு பெண்ணின்வேடம் அணிவது மிக எளிது. ஆனால் ஒருபெண் ஒரு ஆடவனின் வேடம் அணிவதென்றால் மிகச் சிரமமல்லவா? அவள் என்னதான் செய்தாலும் தன் மார்பை மறைத்துக் கட்டுவது மிகக் கஷ்டமாக இருந்தது. காலில் அணிந்த பூட்ஸ்மட்டும் அவளுக்குப் பொருத்தமாகவே இருந்தது. அவள் மிக அழகாக மீசைகளை வைத்துக்கொண்டாள். அவள் மீசையை ஒட்டிக்கொண்டதும் சரியாயிருக்கிறதா என்று கண்ணுடியில் பார்த்துக்கொண்டபோது அவளுக்கும் தெரியாமலே அவள் அதரங்களினின்றும் புன் சிரிப்பு வெளிப்பட்டது. அவள் இருபது நிமிஷத்துக்குள் இவ்வாறு ஆடவனைப்போல் வேட மணிந்துகொண்டாள். கடைசியாக அவள் ஒருமுறை கண்ணுடியில் பார்த்துக் கொண்டாள்; திருப்தியாக இருந்தது. "ஆ! இவ்வளவு அழகாக எப்போதும் இவ்வேடம் அணிந்து கொள்ள முடியவில்லை" என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

உண்மையிலேயே அவ்வேடம் அவளுக்கு மிகப்பொருத்தமாக இருந்தது. யாரேனும் அவசரத்தில் பார்க்கிறவர்கள் அவள் பலராமன் என்றுதான் நினைப்பார்கள். ஆனால் இரண்டு குறைகள்தான் இருந்தன. அதாவது அவள் பலராமனைப்போல் அவ்வளவு உயரமாக இருக்கவில்லை. இரண்டாவது அவளுடைய மார்பு சற்று முன் வந்திருந்தது. அதை அடக்க அவள் எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. எனினும் அவள் அவசரபார்வைக்குப் பலராமன்போலவே காணப்பட்டாள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இவ்வளவு அழ

காகவும் சாமர்த்தியமாகவும் அவள் இருந்ததுபோல் நற்குண நற்செய்கைகளையுடையவளாக இல்லாமற்போனது வருந்தத் தக்கதாகும்.

இவ்வாறு ஆடவனுடைய வேடம் அணிந்துகொண்டு முடிந்ததும் தன் அறையைவிட்டுப் புறப்பட்டாள். அப்போது அவளுக்கு உண்டான சந்தோஷத்துக்கு அளவேயில்லை. அவள் பலராமனைப்போல் வேட மணிந்திருந்தாலும் இன்னும் சொற்பநேரத்துக்குள் அதே பலராமனிட ஆலிங்கனத்தில் தான் சிக்கி இன்பம் அனுபவிக்கப் போவதைப்பற்றி நினைத்துச் சந்தோஷப்பட்டாள்.

மாளிகையில் எங்கும் நிசப்தமாக இருந்தது. தாழ்வாரங்களிலிருந்த விளக்குகளெல்லாம் அணைந்துபோகும் தருவாயிலிருந்தன. ஆதலின் யாரேனும் ஆள் அவ்வழியே சென்றாலும் சமீபத்தில் வந்தாலொழியப் பார்க்கமுடியாத படி இருந்தது. இந்நிலைமையில் அம்புஜமும் பலராமனுடைய வேடத்துடன் அத்தாழ்வாரத்தின் வழியேசென்றாள். அப்போது அவள் சிறிதுதூரம் சென்றதும் திடீரென்று நின்று உற்றுக்கேட்டாள். யாரோ ஒருவர் ஏதோ ஒரு கதவைத் திறப்பதுபோல் சத்தம் கேட்டது. உடனே கவனித்ததில் இராஜம்மாளின் அறை திறக்கப்பட்டு அவள் அறையிலிருந்த படியே வெளியில் எட்டிப்பார்த்ததைக் கண்டாள். உடனே இராஜம்மாள் சரேலென்று தலையை உள்ளே இழுத்துக் கொண்டு மிக அவசரத்துடனும் பரபரப்புடனும் "அவன்தான் அதோ தாழ்வாரத்தில் போய்க்கொண்டிருக்கிறான்" என்று யாரிடமோ சொன்னசத்தமும் கேட்டது. அப்போது அம்புஜம் உண்மையில் சந்தோஷமடைந்தாள். ஏனெனின் இம்முறை இராஜம்மாளும் அவளைப் பலராமனென்றே கருதி விட்டாள் என்பதாலேயே. ஆதலின் அம்புஜம் சிரித்துக்

கொண்டே தன் வழியே போய்விட்டாள். மற்றும் சிறிது நேரத்துக்கெல்லாம் அந்த அறையின் கதவும் மூடப்பட்டது. பழையபடி நிசப்தமாய்விட்டது; அம்புஜமும் தான்போகும் ஆத்திரத்தில், இராஜம்மாள் இந்நேரத்தில் விழித்துக்கொண்டிருந்து வெளியில் எட்டிப்பார்க்கக் காரணமென்ன? அறையில் வேறு யாரிடம் பேசினுள்? என்பதுபற்றி விசாரிக்கவும் அவள் சொற்பநேரத்தைக் கழிக்கவும் விரும்பவில்லை. அவள் பலராமனுடன் லீலைக ளாடவேண்டியதைப்பற்றியே நினைத்துக்கொண்டு நேராகப் போய்விட்டாள்.

பலராமனைப்போல் ஆடைகளை அணிந்துகொண்டு புறப்பட்ட அம்புஜம் மெதுவாகவும் இரகசியமாகவும் நடந்து சென்று பலராமனுடைய அறையின்முன் நின்றுள். தன் மிருதுவான கரத்தால் மெதுவாக அவ்வறையின் கதவைத் தட்டவேண்டியதுதான் பாக்கி. அப்போது யாரோ ஒருவர் தன்னை மெதுவாகவும் ஜாக்கிரதையாகவும் அணுகுவதாகத் தெரிந்தது. உடனே அவள் நாற்புறமும் சுற்றிப்பார்த்தாள். அதுதான் அவளுடைய வாழ்க்கையில் கடைசி பார்வையாக இருந்தது. ஏனெனின், அவள் திரும்பிப்பார்க்கும் அதே சமயத்தில் இரும்பாலான கரத்தைப்போன்ற ஒருகரம் அவள் கழுத்தைக் கெட்டியாகப்பற்றியது. அவள் அச்சத்தால் இட்ட கூக்குரலும் வெளியில் கேட்கமுடியாமற் போயிற்று. கழுத்தில் கைவைக்கப்பட்ட அதேநிமிஷம் ஒரு கூரியகத்தி அவள் மார்பில் பாய்ந்தது. உடனே அவளும் பேச்சுமூச்சின்றிச் சவமாகக் கீழேவிழுந்தாள்!

இந்தப் பயங்கரமான செயல் நடப்பதற்கு ஒரு நிமிஷங்கூடப் பிடிக்கவில்லை. பலராமனுடைய அறையின்முன் என்ன நடக்கிறதென்பதைப் பார்க்கவேண்டுமென்னும் ஆவலுடன் இராஜம்மாள் தன் அறையின் கதவைத்திறந்து அதன் வாயிற்படியில் நின்றுகொண்டு நோக்கியவண்ணமா யிருந்தும் இங்கு

என்ன போராட்டம் நடக்கிறதென்பதை அவளும் அறியமுடியாதபடி இக்கொலை பாதகச்செயல் ஒரு நிமிஷத்தில் முடிந்துவிட்டது. எனினும் அந்த வாயிற்படியில் நடந்த விஷயங்கள் அதே அறையில் இருந்த பலராமனுக்கும் ஜகதீசனுக்கும் கேட்காமற்போகவில்லை. ஆகவே அவர்கள் அம்புஜம்தான் இருட்டில் வழிதெரியாமல் திண்டாடுகிறாள் என்று நினைத்துக்கொண்டு உடனே பலராமன் திடீரெனக் கதவைத்திறந்தான். ஆ! அவர்கள் பார்த்த கோரக்காட்சிதான் என்ன! அம்புஜம் பிணமாகக் கிடக்கின்றாள்; யாரோ சிலர் அவசர அவசரமாக நடந்துசெல்வதாகத் தெரிந்தது. உடனே கொலை நிகழ்ந்தது என்னும் சப்தம் மாளிகை எங்கும் பரவிற்று. தூங்கிக்கொண் டிருந்தவர்களெல்லாம் விழித்துக்கொண்டார்கள். பலராமனும் ஜகதீசனும் தாழ்வாரத்தில் கேட்ட சத்தத்தைப் பின்தொடர்ந்து ஓடினர். மாளிகையைவிட்டு இறங்கும் வழியில் அவர்கள் கொலை செய்துவிட்டு ஓடிய மூவர்களைப் பிடித்துவிட்டார்கள். ஆனால் அக்கொலையாளிகளான முரடர்கள் அவர்களிடமிருந்து விடுவித்துக்கொண்டு ஓட முயன்றனர். அந்த இடத்திலோ இருட்டு அதிகமாயிருந்தது. பலராமன் ஒருவனையும், ஜகதீசன் ஒருவனையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டுவிட்டார்கள். மூன்றாவது மனிதனும் தன் நண்பர்களிருவரையும் விடுவிக்க முயற்சி செய்தானென்றாலும் தன் கத்தியை உபயோகிக்க விரும்பவில்லை. ஏனெனின் இருட்டு அதிகமா யிருந்ததால் கத்தி உபயோகித்தால் அது தன் ஆளுக்குத்தான்படுமோ? எதிரிக்குத்தான் படுமோ என்பது சந்தேகமாய்விட்டது. பலராமனிடமும் ஜகதீசனிடமும் அகப்பட்டுக் கொண்டவர்களும் விடுவித்துக் கொள்ள எவ்வளவோ முயன்றும் ஒன்றும் பயன்படவில்லை.

இவர்கள் இவ்வாறு போராடிக்கொண் டிருக்கையில் சொற்ப நேரத்துக்குள் மாளிகையில் விழித்துக் கொண்ட

வர்களெல்லாம் மின்சார விளக்குகளைத் தட்டிவிட்டு மூலை முடுக்குகளில் ஓட ஆரம்பித்தார்கள். ஆண் பெண்களெல்லாம் அழுகுரலுடன் நான்கு பக்கமும் அலைய ஆரம்பித்தனர். சேவகர்கள் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தனர். அப்போது இரு முரடர்கள் ஜகதீசன், பலராமன் ஆகியவர்களின் கையில் சிக்கிக்கொண் டிருந்தார்கள். மற்றொருவனும் விளக்கு வெளிச்சத்தில் பலராமனைக் கண்டதும், தாங்கள் மூவரும் யாரைக் கொன்றுவிட்டதாக நினைத்தானோ அந்த பலராமன் எதிரில் நிற்பதைக்கண்டதும் பீதியும் அச்சமும் அடைந்து மதிமயங்கி எதிரில் இருந்த சுவரின்மீது முட்டிக் கொண்டான். கைகால்களெல்லாம் அச்சத்தால் விறைத்துப் போனதால் அவனால் நடக்கவோ அசையவோ முடியவில்லை. இதனால் அவன் ஓடிப்போகவும் முடியாமல் திக்பிரமையுடன் அசைவற்று நின்றான்.

ஆகவே அனைவருமாகச் சேர்ந்து முரடர்கள் மூவரையும் பிடித்துக் கட்டிப் போட்டனர். அதில் ஒருவன் அச்சத்தால் உளறியதிலிருந்து இக்கொலைக்கு இராஜம்மாளே காரணமென்பதை அறிந்துகொண்டு உடனே பலராமனும் ஜகதீசனும் இராஜம்மாளுடைய அறைக்குச்சென்று கதவைத் தட்டினார்கள். அப்போது உள்ளே இருந்து "யார் அங்கே" என்னும் சத்தம் வெளிப்பட்டது. உடனே ஜகதீசன் சிறிது அதிகார தோரணையுடன், 'அம்மா, கதவைத்திற' என்றான். இராஜம்மாள் தன் தைரியத்தையெல்லாம் இழந்துவிட்டவளாய், கொலை செய்தவர்கள் அகப்பட்டுக்கொண்டிருப்பார்களென்றும், எல்லா விஷயங்களும் வெளியாய்விட்டிருக்குமென்றும் அறிந்துகொண்டு அச்சத்தின் மிகுதியால், "முடியாது, முடியாது; நான் என் ஆடைகளைக் களைந்துவிட் டிருப்பதால் இப்போது கதவைத் திறக்க முடியாது" என்று மெல்லிய குரலில் கத்தினாள்.

அதைக்கேட்ட பலராமனும் ஜகதீசனும் மறுசொல் பேசாமல் அவ்வறையின் கதவைப் பலாத்காரமாக நீக்கி உள்ளே புகுந்தார்கள். அங்கே இராஜம்மாள் தெரிவித்தது போல் ஆடைகளைக் களைந்துவிட் டிருக்கவில்லை; அல்லது அவள் இரவில் ஓய்வு எடுத்துக்கொண்டதாகவும் தெரிய வில்லை. அவர்களிருவருடைய பார்வையால் அவள் எல்லா விஷயங்களையும் தெரிந்துகொண்டு விட்டாள். உடனே அவள் அவர்களிருவருடைய கால்களைக் கெட்டியாகப் பிடித் துக்கொண்டு சரணமடைந்து "கிருபைகூர்ந்து காப்பாற்றுங் கள்" என்று இறைஞ்சி நின்றாள்.

அப்போது பலராமன் மிக்க கோபத்துடன், "அயோக் கிய மாதே! என்ன கொடுமை; என்ன பயங்கரம்! நீ ஒரு பெரிய கொலைக்காரியாக இருக்கிறாயே; உன்னை என்ன வென்று மன்னிப்பது?" என்றான்.

அதைக்கேட்ட இராஜம்மாள் ஒன்றும் பேச முடி யாமல் எல்லா நம்பிக்கைகளையும் இழந்தவளாய் மூர்ச்சை யடைந்து உயிரற்றவள்போல் கிடந்தாள்.

இதற்கிடையில் அவ்வறைக்குச் சமீபத்தில் மற்றொரு துக்ககரமான சம்பவம் நடைபெற்றது. அதாவது, அம்புஜம் கொலை செய்யப்பட்டதும் ஜகதீசனும் பலராமனும் கொலை, கொலை என்று இட்ட கூச்சலால் அம் மாளிகையிலுள்ள பலரும் விழித்துக் கொண்டதேபோல் இரங்கம்மாளும் ஜான கியும் விழித்துக்கொண்டு அப்போதுதான் தங்களை விட்டுப் பிரிந்த தங்கள் சகோதரி அம்புஜம் எங்கிருக்கிறாள் என்று கவனிப்பதற்காக அங்குமிங்கும் ஓடினார்கள். பலராம னுடைய அறையின்முன், சற்று நேரத்துக்கு முன்வரை நல்லபடி தேக சௌக்கியத்துடன் இருந்த தங்கள் சகோதரி அப்போது பிரேதமாய்க் கிடப்பதைக்கண்டு சொல்லொணாத்

துயர மடைந்தார்கள். அப்போது அவர்களிருவரும், தாங்கள் எவ்வாறு இளவரசியைக் கெடுக்கச் சூழ்ச்சி செய்தார்கள் என்பதை ஒவ்வொன்ருக நினைத்துக்கொண்டு அத்தகைய சூழ்ச்சிகளெல்லாம் தங்களுக்கே பாதகமாய் முடிந்தது பற்றி வருந்தினூர்கள். அம்புஜம் பலராமனுடைய வேடம் தரித்ததால்தான் உண்மையில் அவளே பலராமன் என்று நினைத்துதான் கொலைசெய்யப்பட்டிருக்கிருள் என்பதையும் அச் சகோதரிகளிருவரும் உணர்ந்து கொண்டனர்.

அந்த ஒருநாள் இரவில் எவ்வளவு பயங்கரமான வேலைகளும், பீதியைத் தரத்தக்க ஆச்சர்ய சம்பவங்களும் நடந்தன என்பதைச் சிந்தித்துப் பார்த்தால் ஒவ்வொருவரும் ஆச்சர்யப்படாமலிருக்க முடியாது. உடனே பரிதிபுரப் போலீஸ் அதிகாரிகளை அழைத்துவந்து இராஜம்மாளையும், மூன்று கொலைக்காரர்களையும் அவர்களிடம் ஒப்படைத்தனர். இரங்கம்மாளும்ஜானகியும் மாளிகையிலேயே வைத்துக் கொள்ளப்பட்டார்களென்றாலும் அவர்களையும் கண்காணித்து வர ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டார். இவ்வாறு அன்றிரவு நடந்த இவ்வளவு பயங்கர விஷயங்களைப் பற்றி அறிந்த நாம் அவைகளை விட்டு விட்டு இப்போது வேறு விஷயத்தைக் கவனிப்போம்.

186557
சென்னை-600 008

138 - வது அத்தியாயம்

இரத்தினபுரியில் வட்டித்தொழில் நடத்திவந்த வேலப்பன், அவனைப் பழிவாங்கவேண்டுமென்று நினைத்த விசுவநாதனின் முயற்சியால் ஒரு கடன்காரன் கையில் சிக்கிக்கொண்டு சிவில் சிறையில் இடப்பட்டான் என்பது முன்னமே கூறப்பட்டிருக்கிறது. இப்போது நாம் அச்சிறைக்குச்

செல்வோம். நேயர்காள்! சிறைக்குச் செல்வதென்றால் அதி லும் பலவகைகள் இருக்கின்றன. எத்தனையோ ஜனங்கள் கொலை, களவு, கள், காமம், பொய் எனப்படும் பஞ்சமகா பாதகங்களை இழைத்துவிட்டு அதனால் சர்க்காரால் தண்டனை யிடப்பட்டுச் சிறை செல்கின்றனர். ஆனால் பெரிய மகான் களும், ஒழுக்கத்திற் சிறந்த சீமான்களும் கொள்கை காரண மாகவும் சிறைசெல்ல நேரிடுகிறது. அப்போது அமலில் இருக்கும் ஆட்சிமுறைக்கு மாறான கொள்கையை எவரே னும் கொண்டால் அவர்களும் சிறையிடப்படுகின்றனர். இப் போதும் நம் நாட்டில் எவ்வளவோ தேசாபிமானிகள், தங் கள் தேசத்தை நேசிக்கிறார்களென்னும் காரணத்துக்காகச் சிறை செல்கின்றனர். இவ் விருதாத்தாரும் சிறையில் இருந்து அங்கு பலவகைக் கஷ்டங்களையும் அனுபவிக்கின்ற னர். ஆனால் சிறை செல்லும் மற்றொரு சாராரும் உண்டு. அவர்கள் சிறை அதிகாரிகள், சிறைக் கைதிகளுக்கு மதோப தேசம் செய்வோர், வைத்திய அதிகாரிகள், கைதிகளின் நன்மை தீமைகளைக் கவனிப்போர் ஆகியோரும் அடிக்கடி சிறை செல்கின்றனர். ஆனால் அவர்கள் சிறையிலேயே தங்கு வதுமில்லை; அக்கஷ்டங்களை அனுபவிப்பதுமில்லை. ஆனால் இப்போது நாம் சிறைக்கு நேரில்போகாமல் மனோபாவத்தில் செல்கின்றோம். நமது மனக்கண்ணால் அங்கு நடக்கும் காரி யங்களைக் கவனிக்கப்போகின்றோம்.

அச்சிறையில் வேலப்பன் தன் அறையில் மேலும் கீழு மாக நடந்துகொண்டிருக்கிறான். அந்த அறையும் அதி லுள்ள சாமான்களும் மிக ஆபாசமாகக் கிடக்கின்றன. அங்கே விரிக்கப்பட்டிருந்த கம்பளத்தின்மீது இரண்டு அடி எடுத்துவைத்தால் அவ்வறை முழுதும் பரவக்கூடிய தூசு எழும். அறையின் கதவு வெளியில் பூட்டப்பட்டிருக்கிறது.

வேலப்பனுக்கு ஏதேனும் வேண்டியிருந்தால் அவன் மணி அடிக்கவேண்டும். அதுவும் ஒன்று அல்லது இரண்டுமுறை அடித்ததும் யாரும் வந்துவிடமாட்டார்கள். பன்னிரண்டு முறை மணியடித்த பிறகு மிக விகாரமான ஒரு இளம்பெண் அங்கே வருவாள். அவளிடம் வேலப்பன் தனக்கு வேண்டியதைச் சொல்லவேண்டும். அவள் அதைக் கொண்டுவருவதற்கும், அழைத்ததும் வர எவ்வளவுநேரம் பிடித்ததோ அதற்கு இரட்டிப்பு நேரமாகும். அவன் ஏதேனும் தேகாப்பியாசம் செய்ய விரும்பினால் அவன் இருக்கும் அறையிலிருந்து பின்புறமாக ஒரு மைதானத்தில் இறங்கலாம். அது முப்பதடி நீளமுள்ளதாயும், பதினாறு அடி அகலமுள்ளதாயும் இருக்கும். அதில்தான் அவன் மேலும் கீழுமாக உலாவிக்கொண்டிருக்கவேண்டும். அதைச் சுற்றிலும் நாற்புறத்திலும் இரும்புக் கம்பிகளால் உயரமான வேலி போடப்பட்டிருக்கின்றது. அதில் அவன் மேலும் கீழுமாக உலாவும்போது ஒரு பெரிய கூண்டில் அவன் உலாவுவதுபோல் இருக்கும்.

வேலப்பன் அச்சிறைக்குச் சென்றது முதல், எப்படியாவது சமாளித்துத் தன் கடன்களைத் தீர்க்கத் தன்னாலியன்றதையெல்லாம் செய்து பார்த்தான். எப்படியாவது தான் பொய்க் கையெழுத்துப்போட்ட செக் விஷயம் வெளியாவதற்குள் விடுதலை யடைந்து வேறு தேசம் ஓடிப்போக வேண்டுமென்பது அவனது ஆவல். ஏனெனின், அக்காலத்தில் அத் தேசத்தில் பொய்க் கையெழுத்துக் குற்றத்துக்கும் மரணதண்டனையே விதித்து லந்தார்கள். அவன் என்ன முயற்சிசெய்தும் ஒன்றும் பயன்படாமல் நாளுக்குநாள் அவனுடைய நிலைமை மிகவும் கேவலமாய் வந்தது. அவன் ஒரு கடன்காரர் தொல்லைக்காகச் சிறைக்கு வந்த சமயத்தில் மற்ற கடன்காரர்களும் வழக்குத் தொடர்ந்து டிகிரிபெற்று அவன்

சொத்து சுதந்தரங்களையும், வீடு முதலிய பூஸ்திதிகளையும், தட்டுமுட்டுச் சாமான்களையும் ஏலம்போட்டு எடுத்துக் கொண்டு விட்டார்கள். ஆகவே அவனுடைய குடும்பம் அழிந்து விட்டதென்றே கூறவேண்டும். வேலப்பனுடைய மனைவியும் மகளும் சாமர்த்தியமாகச் சில முக்கிய சாமான் களை ஒளித்து வைத்திருந்து யாருக்கும் தெரியாமல் ஒருநாள் ஒரு வாடகை வண்டியில் ஏறிக்கொண்டு வேலப்பன் இருக் கும் சிறை அமைந்துள்ள ஜாடித்தீவிலேயே ஒரு சிறுவீட்டில் வந்து தங்கினார்கள். அதனால் அப்போதைக்கப்போது வேலப்பனைக்கண்டு பேசலாமென்பது அவன் மனைவியின் எண்ணம்.

வேலப்பன் முதலில் இரத்தினபுரியைவிட்டு ஓடிப்போக முயன்றபோதே விசுவநாதனின் உதவியால் சுமார் இரண்டா யிரம் பவுன்வரை தனக்கு வரவேண்டியதை வசூலித்திருந் தான் என்பது நேயர்களுக்குத் தெரிந்த விஷயமே. அதை அவன் மனைவியிடம் மறைத்து வைக்கவில்லை. அதில் தான் சில பவுன்களைத் தன் மனைவியின் செலவுக்காகக் கொடுத்து விட்டுப் புறப்பட்டான். இதற்குள் அவனைப் பிடித்து விட் டார்கள். அவன் அப்பணத்தைக்கொண்டு தன்னைப் பிடித் திருக்கும் கடன்காரனுக்குக் கொடுத்துவிட்டு விரைவில் அத் தேசத்தைவிட்டுச் செல்ல விரும்பினான். ஏனெனின், தன் பொய்க் கையெழுத்திட்ட செக் வெளியாய் விடுமானால் அவன் மரணதண்டனையை அல்லவோ அடையநேரிடும். அவன் அந்த செக்கில் இருபத்தொருநாள் தவணை போட் டிருந்தான். அது கழிய இன்னும் மூன்று நாட்கள்தான் இருக்கின்றன. ஆகவே வேலப்பன் மனக்குழப்ப மடைந்த வனாய் அதிக விசாரத்துடன் அறையில் மேலும் கீழுமாக உலாவிக்கொண் டிருந்தான்.

மேலும் அவன் அன்று தன் மனைவியை, தன்னை அடைத்து வைத்திருக்கும் கடன்காரனிடம் சமாதானம் செய்துகொண்டு வர அனுப்பி யிருந்தான். ஆதலின் அவளது வரவை ஆவலுடன் எதிர்பார்த்தவனாய்த் தன்அறையில் இந்த நிலைமையில் இருந்தான். அவளும் அவனிடம் போய் விட்டுத் திரும்பி வந்தாள். வேலப்பன் அவளை விழுங்கிவிடுபவன்போல் நோக்கினான். அவள் அவ்வளவு சிறந்த குணங்களை யுடையவளல்ல. கஷ்டத்திலும் சுகத்திலும் கணவனைப் பின்பற்ற வேண்டுமென்பது அவளுக்குத் தெரியாது. வறுமையில் மூழ்கிவிட்ட இக்காலத்திலும் அவள் சிறிதும் தன் அகம்பாவத்தை விடவில்லை. தன் கணவன் அவள் போய் வந்த விஷயமாய் முடிவை அறிந்துகொள்ள எவ்வளவு ஆவலுடையவனாய் இருப்பான் என்பதை அறிந்தும் அதைப் பற்றி ஒன்றும் சொல்லாமல் அங்கிருந்த சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டு அக்கடன்காரன் வீட்டுக்கு நடந்து போய் வந்ததில் எவ்வளவு சிரமத்தை அவள் அனுபவித்தாள் என்பது பற்றி விவரித்துக் கொண்டிருந்தாள்.

வேலப்பன் அதைப்பற்றி அதிகம் கவலை செலுத்தாமல் "நீ நான் கடன் கொடுக்க வேண்டியவனைக் கண்டாயா" என்று மிக ஆவலுடன் கேட்டான். அப்போதும் அவள் அவனுடைய சங்கடத்தை உணர்ந்து கொள்ளாமலும் அறியாமலும் சாவதானமாக "ஆம்; நான் அவனைப்பார்த்தேன்" என்றாள்.

வேலப்பன்:—சரி; அப்படியானால் நீ அவனிடம் என்ன சொன்னாய்' அவன் உன்னிடம் தெரிவித்ததென்ன! அவன் வழிக்கு வருவானா? நீ என்ன நினைக்கிறாய்?

மனைவி:—நான் நிச்சயமாக ஒன்றும் சொல்ல முடியாது; அவன் ஒரு ஆளை உன்னிடம் அனுப்பி விஷயத்தைத் தெரிவிப்பான்.

வேலப்:—எப்போது அவன் ஆளை அனுப்புவானோ? அது வரை நான் விஷயம் விளங்காமல் ஆவலுடன் காத்திருக்க நேரிடுமோ? அவன் சொன்னதுதான் என்ன? நீ அவனிடம் என்ன தெரிவித்தாய் என்பதை அங்கு நடந்தபடியே என்னிடம் இப்போது கூறு. அவன் பதில் சொல்லும்போது அவனுடைய முகத்தில் எப்படிப்பட்ட குறி காணப்பட்டது?

மனைவி:—நீ என்ன இவ்வளவு ஆவலுடன் இருக்கிறாயே! நீ பயப்படுவதைப்பார்த்தால் சிறையில் இருப்பது மட்டுமல்லாமல் விரைவில் மரணதண்டனையும் அடைபவன் போலல்லவோ பீதி யடைந்திருக்கிறாய். என்னை அவ்வாறு உற்றுப்பார்க்காதே. என்னையும் அச்சக்கடலில் அழுத்திவிடுவாய்போலத் தெரிகிறதே!

வேலப்:—அப்படி ஒன்றுமில்லை. உனக்கும் என்னை இங்கே வைத்திருக்கும் அம்மனிதனுக்கு மிடையில் நடந்த பேச்சு வார்த்தைகளை அப்படியே சொல் பார்ப்போம்.

மனைவி:—சரி; சொல்கிறேன் கேள். அவன் தன் சொந்த அறையில் உட்கார்ந்துகொண் டிருந்தான். நான் யார் என்பதை அவனிடம் தெரிவித்தேன். அவன் சிறிதும் தாட்சண்யமின்றி மிக்க கொடிய பார்வையுடன் என்னைப் பார்த்தான். நான் உன்னிடம் ஆயிரத்து எண்ணூற்று ஐம்பது பவுன்கள்தான் இருப்பதாகவும், அதைப் பெற்றுக்கொண்டு உன்னை விடுதலை செய்துவிடவேண்டுமென்றும் இன்றேல் நீ இன்சால்வென்சி தாக்கல் செய்துவிட்டால் மொத்த ஆஸ்தியில் மொத்த கடனுக்கு ஒரு பவுனுக்கு இரண்டு ஷில்லிங்குதான் கிடைக்கும் என்றும் சொன்னேன்.

வேலப்:—அதற்கு அவன் என்னசொன்ஞன்? அவனுடைய முகத்தெளிவு எப்படியிருந்தது? ஏதேனும் இரக்கம் காட்டிஞனு? சொல்; சீக்கிரம் சொல்.

மனைவி:—இல்லை; அவன் இரக்கம் காட்டினனென்று நான் நினைக்கவில்லை.

வேலப்:—சரி; இரக்கம் காட்டாவிட்டாலும் நீ சொன்னவைகளை அவன் நம்பினன் என்ருவது நீ நினைக்கிருயா?

மனைவி:—அதையும் சொல்வதற்கில்லை; ஏனென்ருல் அவன் அவ்வளவு அகங்காரத்துடனும் பிடிவாதத்துடனும் இருந்தான்.

வேலப்:—ஆ, கடவுளே! பிறகு அவன் சொன்னதாவதென்ன?

மனைவி:—சொற்பநேரம் ஏதோ யோசனை செய்பவன்போல் காணப்பட்டான். பிறகு ஒரு பெரிய புஸ்தகத்தை எடுத்துப் புறட்டிப்பார்த்தான். மூவாயிரத்து நானூறு பவுன்கள் உன்னிடமிருந்து அவனுக்குச் சேரவேண்டுமென்றும், அவன் இவ்விஷயத்தில் ஏதேனும் முடிவாகச் சொல்வதற்குமுன் ஒரு நண்பனுடன் யோசிக்கவேண்டுமென்றும் கூறினன்.

வேலப்:—ஓ; ஒரு சினேகிதனு! (விசுவநாதனே என நினைத்துக்கொண்டு) அவனுக்குச் சினேகிதனு யிருக்கலாம்; ஆனல் அவன் எனக்குப் பரமவிரோதியாய் இருக்கிருன். பிறகு என்னதான் கூறினன்.

மனைவி:—அதிகமாக ஒன்றும் சொல்லவில்லை. இன்றுமாலைக்குள் உன்னிடம் ஒரு ஆளை அனுப்பி விஷயத்தைத் தெரிவிப்பதாகச் சொன்ஞன். நான் வரும்வழியில் உன் செய்கைகளுக்கெல்லாம் இது தக்கதோர் தண்டனையே என்று நினைத்துக்கொண்டே வந்தேன். குமா

வேல்பிரபுவின் மனைவி ஏகநாயகிச்சிமாட்டி முதலிய வர்களிடம் நீ மோகங்கொண்டு எவ்வளவு பணம் வீண் விரயம் செய்தாய். அப்பிரபுக்களெல்லாம் உன்மீது வழக்குத் தொடரப்போவதாகக் கேள்வி.

வேலப்:—சரி, போதும் நிறுத்து; என்னிடத்தில் மட்டுமா குற்றங்குறைகள் இருக்கின்றன? என்னிடம் இருப்பது போலவே உன்னிடமும் குற்றங்குறைகள் இல்லையா? நீ மாத்திரம் வீண்செலவுகள் செய்யவில்லையா?

மனைவி:—ஆ; இருந்தாலும் நீ சற்றும் ஒழுக்கமின்றி விபசார புத்தியுடன் அலைந்தது மிகக் கேவலமான குற்றமல் லவா? இதனால் அல்லவோ நமது குடும்பத்துக்கு இவ் வளவு ஆபத்துகள் வந்திருக்கின்றன.

வேலப்:—இதைப்பற்றி அதிகம் பேசவேண்டாமென்று நான் முன்னமே சொன்னேனல்லவா? நான் பல கடிதங்கள் எழுதவேண்டியதாக இருக்கிறது. ஆதலால் நீ வீட் டுக்குப் போ. உனக்குச் சௌகரியமும் விருப்பமும் இருந்தால் மாலையில் இங்கே வா.

"சரி; நான் வந்தாலும் வருவேன்" என்று கூறிக் கொண்டே அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுவிட்டாள். தன் கணவன் எப்படிப்பட்ட ஆபத்தான நிலைமையில் இருக்கிறான் என்பதை அவள் உணரவுமில்லை; உணர முயற்சிக்கவுமில்லை.

தன் மனைவி தன்னைவிட்டுப் போய்விட்டபிறகு வேலப் பன் பழையபடியே அவ்வறையில் மேலும் கீழுமாக உலாவிக் கொண்டிருந்தான். அப்போது அவன் எவ்வளவு விதமான யோசனைகளைச் செய்திருப்பான்; ஏதோ ஆபத்து இருக்கிற தென்று நிச்சயித்து விட்டுச் சொல்லொணாத் துயரத்தில் மூழ்கினான். அப்போது அவன் தன் கடிகாரத்தைப் பார்த்

தான். மணி ஒன்று என்று தெரிந்து கொண்டான். சிறிது நேரம் அதேமாதிரி உலாவிக்கொண்டிருந்த பின்னர் மணி இரண்டும் ஆகி மூன்று அடிக்கப்போவதைக் கண்டான். தன் மனைவி தெரிவித்தபடி தன்னை அங்கு வைத்திருக்கும் ஆளிடமிருந்து யாரும் வரவில்லை. பார்த்தான்; ஆஹா! ஒரு கால் அவன் ஏமாற்றி விட்டான்போலும் என்று நினைத்துக் கொண்டான். எனினும் அவன் நம்பிக்கையை இழக்க வில்லை. சமுத்திரத்தில் மூழ்கப் போகிறவனும் நம்பிக்கை யால் சிறு துரும்பைப் பிடிக்கிறான் அல்லவா? அதுபோல தனக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தில் எதனிடமும் அவனுக்கு நம் பிக்கை உண்டாயிற்று. அவன் அவ்வளவு சிறு நம்பிக்கை யேனும் கொள்ளாமலிருந்தால் அவன் பைத்தியக்காரனாய் விடுவான் என்பது நிச்சயம்.

மணி மூன்றும் அடித்துவிட்டது. அப்போது சிறையின் முன்பக்க வாயிலில் மணி அடிக்கும் சத்தம் கேட்டது. இத் தகைய சத்தம் இதற்குமுன் இரண்டுமணி நேரமாக அடிக் கடி கேட்டுக்கொண்டுதான் இருந்தது. அப்போது ஒவ் வொரு முறையும் வேலப்பன், தன்னிடமே யாரோ ஆள் வருவதாக நினைப்பான்; ஆனால் யாரும் வரமாட்டார்கள். இதுபோலவே இம்முறையும் நினைத்தான். மறு நிமிஷமே தான் அடைபட்டிருக்கும் அறையின் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டான். அக்கதவு திறக்கப்பட்டதும் ஒரு ஆள் அவ்வறையில் புகுந்தான்.

அவ்வாறு வந்த ஆள் தன் பழைய குமாஸ்தாவாகிய விசுவநாதன் என்பதைக் கண்டதும் அவன் உயிர்போய் விட்டதென்றே கூறவேண்டும். அவன் அவ்வளவு அவமானத் தையும் ஆத்திரத்தையும் அடைந்தான். ஆனால் இப்போது விசுவநாதனிடம் மிகப் பணிவுடன் நடந்துகொள்ள வேண்டு

மென்பதையும் உணர்ந்தான். ஏனெனின் இப்போது தன் வழக்கில் பஞ்சாயத்து செய்யக்கூடியவர் அவனைத் தவிர வேறு யாருமில்லை.

விசுவநாதனுடைய முகத்தோற்றத்தால், சிறையி லடைபட்டிருக்கும் தன் பழைய எஜமானன் விஷயத்தில் அவன் எவ்வாறு நடந்து கொள்வான் என்று கூறுவதற்கு முடியாம லிருந்தது. வேலப்பன் இப்போது அடைந்துள்ள பரிதாப நிலைமையைக்கண்டு அனுதாபப் படுகிறானென்றோ அல்லது நமக்கென்னவென்று கவலையற்றவனாய் இருக்கிறானென்றோ கூற முடியாம லிருந்தது. வேலப்பன் இவைகளையெல்லாம் எளிதில் தெரிந்துகொண்டு விட்டான். எனினும் வேலப்பன் நம்பிக்கையை இழந்துவிடாமல் என்ன நடக்கிறதெனப் பார்ப்போம் என்று நிதானத்துடன் இருந்தான்.

அப்போது விசுவநாதன், "ஐயா, நான் இப்போது உங்களை இங்கே அடைத்து வைத்திருக்கும் முதலாளியிட மிருந்து வருகின்றேன். நான் முன்னமே உனக்குத் தெரிவித்திருக்கிறபடி அவன் உன்னைப்பற்றிய எல்லா விஷயங்களையும் என்னிடம் ஒப்படைத்து விட்டான்" என்றான்.

அதற்கு வேலப்பன் அச்சத்துடன் நடு நடுங்கிய வண்ணம், "ஆம், ஆம். நீசொன்னது என் ஞாபகத்திலிருக்கிறது. என்னை மன்னித்து விடும்படி நீ அவனிடம் சிபார்சு செய்திருக்கிறாயா? நீ அப்படித்தான் செய்திருப்பாயென்று நான் நினைக்கிறேன்" என்று கேட்டான்.

அதைக்கேட்ட விசுவநாதன், 'நான் சில முக்கியமான விஷயங்களை உன்னிடம் தெரிவிக்கவே இங்கு வந்திருக்கிறேன்; ஆதலின் நான் சொல்லப்போவதைச் சிறிது கவனமாகக்கேள். இவ்விஷயங்கள் உனக்குத் தெரியவேண்டியது அவசியமென நான் நினைக்கிறேன்" என்றான்.

அப்போது வேலப்பன் மிகுந்த ஆத்திரத்துடனும் துக்கத்துடனும், "சரிதான், கவனம் செலுத்துகிறேன். என்னை இங்கு அடைத்திருக்கும் முதலாளி என்னசொன்னார் என்பதை உடனே தெரிவிக்கவும்" என்றான்.

விசுவநாதன் உடனே அங்கிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு மிக்க நிதானமாகவும், ஏதோ திண்ணமான உறுதியுடனும் பேசுபவன்போல் இருந்தான். வேலப்பன் விஷயத்தை அறிய மிக ஆவலுள்ளவனாக இருந்தானென்றாலும் விசுவநாதனுக்குக் கோபம் வரும்படி நடந்துகொள்ள அவனுக்குச் சம்மதமில்லாததால் ஒன்றும் பேசாமல் மௌனமாக ஒரு மூலையில் இருந்த மற்றொரு நாற்காலியில் உட்கார்ந்தான்.

அப்போது விசுவநாதன் பின்வருமாறு கூறலானான்:— "வேலப்பரே! நான் இரண்டாவது முறையாக உன்னிடம் வேலைக்கு அமர்ந்ததுமுதல் உனக்கு விரோதமாக என்னென்ன காரியங்களை எப்படிச் செய்து வருகிறேன் என்பதைப் பகிரங்கமாக உன்னிடம் அறிவிக்க விரும்புகிறேன். நீ நகரசபைக்கு ஒரு அபேட்சகனாக நிற்கும்படி உன்னைத் தூண்டுவதற்கு நானே அப்பத்திரிகைகளை வேண்டுமென்றே உன் பார்வையிற் படும்படி உன் மேஜைமீது வைத்தேன். நீ பெருமைக்கு ஆசைப்பட்டு அந்தத் தேர்தலுக்காகப் பெருந் தொகையைச் செலவழிப்பாய் என்பதை நான் அறிவேன். பிறகு பலர் உன்னை ஆதரிக்க முன்வந்தபோதும் நானே அவர்களிடமெல்லாம் நேரில் சென்று உன் யோக்கியதைகளை எடுத்துக்காட்டி உன்னைத் தேர்ந்தெடுக்கக்கூடாதெனச் சொன்னேன். ஆதலால்தான் உனக்கே வெற்றி கிடைக்கும்போலிருந்தும் இறுதியில் ஏமாற்றமடைய நேரிட்டது. ஆகவே அதில் உன் தோல்விக்கு நானே காரணமாவேன்.

அதற்குப் பிறகு பல கடன்காரர்கள் உன்னிடம் நம்பிக்கை இழந்துவருவதை நீ அறிந்தாயல்லவா? அதற்கும் நானே காரணம். நான் அனைவரிடமும் சென்று உன்னிடம் அவர்களுக்கு அவநம்பிக்கை உண்டாகும்படி செய்தேன். மேலும் நீ சாதாரணமாகப் பணம் லேவாதேவி செய்யும் பாங்கி குமாஸ்தாவின்மூலம் உன் நிலவரத்தையும் நான் அறிந்துகொண்டேன்.''

அப்போது வேலப்பன், தான் பொய்க் கையெழுத்திட்டுச் செக் மாற்றியதையும் விசுவநாதன் அறிந்துகொண்டு விட்டானே என்னும் அச்சத்தால் தனக்கும் தெரியாமல், "ஆ" என்று வாய்விட்டலறினன். வேலப்பன் அவ்வாறு பீதியடைந்ததைச் சற்றும் கவனியாதவன்போல் விசுவநாதன் மேலும் தன் விஷயத்தைச் சொல்லத்தொடங்கிப் பின்வருமாறு சொன்னன்:—

அந்தப்பாங்கி குமஸ்தாவிடமிருந்து உனக்கு அங்கு எவ்வளவு பணம் இருக்கிறதென்பதைப் பற்றிய முழுவிவரத்தையும் அறிந்துகொண்டேன். உன்னைப்பற்றி பாங்கிக்காரர்கள் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டுமென எச்சரிக்கை செய்யும்படி அக்குமஸ்தாவிடம் தெரிவித்தேன். பாங்கிக்காரர்கள் உனக்கும் ஒருகடிதம் எழுதி உன் கணக்கை திருப்திகரமான நிலைமையில் வைத்திருக்கும்படி சொன்னதாகத் தெரிகிறது. நீ அதற்காகப் பல செல்வர்களிடம் பணம் கடன் கேட்டாய். அப்போதும் நான் இரகசியமாக என் வேலையைச் செய்துகொண்டிருந்தேன். உன் பொருளாதார நெருக்கடி அவர்களுக்கும் தெரியும்படி விஷயங்களைப் பரவச்செய்து வந்தேன். ஆதலின் எல்லாச்செல்வர்களும் உன் வேண்டுகோளை மறுத்துவிட்டார்கள். இதனல் உனக்கு எவ்வளவு கஷ்டநஷ்டங்கள் ஏற்பட்டன என்பதையும் நான் அறிந்துகொண்

டிருந்தேன். நான் இவ்வளவுடன் நிற்காமல் வேறு துறைகளிலும் காரியம் செய்ய ஆரம்பித்தேன். உன்னுடன் வியாபாரம் செய்த பெரிய பணக்காரர்களிடம் அடிக்கடி சென்று உன்னிடம் வாங்குவதைவிடச் சுலபமான வட்டிக்கு யாரிடம் பணம் வாங்கலா மென்பதையும் தெரிவித்து உன் வியாபாரத்தையும் மட்டுப்படுத்தினேன். இவ்வாறெல்லாம் நீ விரைவாக அழிந்து வருவதைக்கண்டு உள்ளுக்குள் சந்தோஷ மடைந்தேன். உனக்குக் கடன் கொடுத்தவர்களிடம் சென்று பணத்தை உடனே வாங்கி விடும்படி கூறினேன். அதனால்தான் எல்லாரும் ஒரேசமயத்தில் உன்னைப் பணம் கேட்க ஆரம்பித்தார்கள். பிறகு நீ எவ்வளவு பணம் வசூலிக்க முடியுமோ அதை வசூலித்துக்கொண்டு தேசாந்தரம் போய்விட எண்ணியதையும் அறிந்து நீ ஓடிப்போகாமல் சற்று நிதானமாக இருக்கவே நான் என்னுலியன்ற பணத்தை வசூல்செய்து கொடுத்தேன். அதனால் சந்தோஷமடைந்து நீ சிறிதுநாள் இங்கு இருக்கலாமென நினைத்தாய். அதையும் நான் கண்டுகொண்டேன். உடனே நான் உனக்கு அதிக தொகையைக் கடன் கொடுத்திருக்கும் செல்வனிடம் சென்று உடனே உன்மீது நடவடிக்கை எடுக்கும்படி சொன்னேன். பிறகு நடந்ததெல்லாம் உனக்குத்தெரியும். நீ எனக்கு முன்பு இழைத்த கொடுமைக்குப் பழிவாங்கவே இவ்வாறு செய்தேன்.

விசுவநாதன் சொன்னதை யெல்லாம் கேட்ட வேலப்பன் மிக்க அச்சத்துடன், "ஆம், எனக்குத் தக்கபடி தண்டனை கிடைத்து விட்டது. ஆகவே என்னைப் பழிக்குப்பழி வாங்கியதில் நீ திருப்தி யடைந்திருப்பாய் என்று நம்புகிறேன். இனியேனும் என்னிடம் இரக்கங்கொண்டு என்னை விடுவிக்க உதவி செய்வாயோ?" என்றான்.

அப்போதும் சற்றும் இரக்கமில்லாதவன்போல் நிர்த்தாட்சண்யமான முறையில் விசுவநாதன், "இன்னும் கேள்; உன்னிடம் கூறவேண்டிய விஷயம் இன்னும் சில இருக்கின்றன, நான் எப்படி மெதுவாகவும் உறுதியுடனும் சாமர்த்தியமாகவும் உன்னைப் பழிவாங்க ஏற்பாடு செய்து வந்தேன் என்பதை என் வாயினாலேயே இப்போது நீ அறிந்துகொண்டாய். மேலும் குமாரவேல் பிரபுவின் மனைவி ஏகநாயகிச் சீமாட்டியுடன் உனக்குச் சம்பந்த மிருக்கிறதென்பதையும் நானே குமாரவேல் பிரபுவுக்கு அறிவித்து, நீ ஒரு பார்சலில் அடக்கம் செய்து ஏகநாயகிக்கென அனுப்பிய ஐயாயிரம் பவுன்களும் குமாரவேலிடம் அகப்பட்டு விடும்படியும் செய்தேன். ஆ! இப்போது உன் நெருக்கடியான நிலைமையில் அந்த ஐயாயிரம் பவுன் உன்னிடம் இருக்கலாகாதா என நீ விரும்புகிறாய் அல்லவா? அத்தொகை இப்போது உன்னிடம் இருந்தால் தற்காலக் கஷ்டத்திலிருந்து விடுதலை யடைவாயன்றோ?" என்று கூறினான்.

அப்போது வேலப்பன், "ஆனால் இப்போது அப்பணத்தை அடைவது அசாத்தியமாயிற்றே, நீ கடைசிவரை என்னை அழித்து விடுவதென்றே தீர்மானித்திருக்கிறாயா? என்மீது சிறிதும் இரக்கம் காட்டமாட்டாயோ" என்று பரிவுடன் கேட்டான்.

அதற்கு விசுவநாதன் மிக்க ஆத்திரத்துடனும் பகைமையுடனும், "நான் உன்னிடம் சிக்கியபோது நீ என்னிடம் இஞ்சித்தேனும் கருணை என்பதைக் காட்டினாயா?" என்று கேட்டான்.

வேலப்பன்:—நான் உன்னை மீண்டும் என்னிடம் வேலைக்கு வைத்துக்கொள்ள வில்லையா?

விசுவநாதன்:—என்னை வேலைக்கு வைத்துக்கொண்டது வாஸ்தவமே யாயினும் என்னிடமுள்ள அன்பால்

வைத்துக் கொள்ளவில்லை. உனக்கு வேறு நல்ல ஆள் கிடைக்காததால் என்னை வைத்துக்கொண்டாய்.

வேலப்:—எப்படியாயினும் சரி; நீதான் பழிக்குப்பழி வாங்கி விட்டாயே; நீயே ஒப்புக்கொள்கிறபடி என்னை அழித்து விட்டாய். இப்போதேனும் என்மீது கருணை காட்டலாகாதா?

அப்போது விசுவநாதன் தான் உட்கார்ந்திருந்த ஆசனத்தைவிட்டு எழுந்து மிக்க விரோதபாவத்துடன், "நீ என்னை அழித்துவிட வில்லையா? என்னை அநாவசியமாக அவமானத்துக்கும் கஷ்டத்துக்கும் ஆளாக்க வில்லையா? எனக்குத் தண்டனை கிடைக்காதபடி விடுதலை யடைந்தேனே யொழிய என் மானமே போகும்படி நீ செய்த குற்றத்தால் இன்னும் நான் பழியினின்றும் விலக முடியவில்லை யல்லவா? மேலும் நீ என் சகோதரியையும் அழித்துவிட முயன்றா யல்லவா? அவளுடைய சகோதரனாகிய என்னைக்கொண்டே நீ அவளைக் கெடுக்க முயற்சி செய்யவில்லையா? வேலப்பரே! நீ என் விஷயத்தில் எவ்வளவு கேவலமாக நடந்துகொண்டிருக்கிறாய் என்பது உனக்கே தெரியாதா! ஆதலின் நான் உன்னிடத்தில் எல்லையற்ற துவேஷத்தைக் கொள்வதிலும், உன் மரணத்துக்கே வழிவைக்க நினைப்பதிலும் ஆச்சர்யமென்ன இருக்கிறது. நான்மட்டும் மனிதன் என்னும் பெயருக்கே தகுதியற்றவனாகவும், பயங்காளியாகவும் இருந்திருந்து உன் இஷ்டப்படி நான் ஆடாதபடி என்னை இறைவன் காப்பாற்றினான். ஆதலின் நான் உனக்கு அழிவைத் தேடியதில் பெருமையையே யடைகிறேன். இப்போது நான் முடிவாகச் சொல்கிறேன் கேள். உன்னை இங்கே அடைத்திருக்கும் முதலாளி அவனுக்குச் சேரவேண்டிய தொகையில் ஒரு ஷில்லிங்கு குறைவாகவும் வாங்கமாட்

டான். ஏனெனின் அவன் உறுதியுடன் இருந்தால் அவனுக்கு முழுதொகையும் கிடைக்குமென நான் உறுதி கூறியிருக்கிறேன். எப்படியெனின், உன்னிடம் ஆயிரக்கணக்கான பவுன்கள் இருப்பதாக நான் அறிந்துகொண்டிருக்கிறேன். நீ அதை இரகசியமாக வைத்துக்கொண்டு உனக்குக் கடன் கொடுத்தவர்களை எவ்வளவுதூரம் ஏமாற்றலாமோ அவ்வளவுதூரம் ஏமாற்றத் துணிந்திருக்கிறாய் என்பதையும் நான் அறிவேன்,'' என்று கூறினான்.

அப்போது வேலப்பன் ஆத்திரத்துடன், "ஆனால் நீ இப்போது சொன்னது சுத்தப் பொய்'' என்று சொன்னான்.

அதற்கு விசுவநாதன், "அது எனக்குத் தெரியும்; இப்போதும் உனக்குக் கடன் கொடுத்தவர்கள் என்பேச்சை நம்புவார்களே யொழிய உன்பேச்சை நம்பமாட்டார்கள்'' என்றான்.

வேலப்பனும் துணிவுடன், "அப்படியானால் நாம் எப்படி நடக்கிறதென்பதைப் பார்ப்போம். ஆதலின் நமது பேச்சுவார்த்தை இனி அதிகம் நீடித்திருக்கவேண்டியதில்லை'' என்று சொன்னான்.

அப்போது விசுவநாதன், "ஓ! நான் சிக்கவைத்திருக்கும் இவ்வலையினின்றும் நீ விடுவித்துக்கொள்ளலாமென்று நினைக்கிறாயா? அப்படியானால் நீ நினைப்பது தவறு. நீ பொய்க் கையெழுத்திட்டு பாங்கியில் மாற்றிக்கொண்ட செக்கின் உண்மை இன்னும் மூன்று தினத்தில் வெளிப்பட்டுவிடும். அப்போது உன் சமாசாரம் தெரிந்துவிடுகிறது'' என்றான்.

இதைக்கேட்ட வேலப்பன் பயந்து முகவிகாரமடைந்து மெய்நடுங்கத் தன் ஆசனத்தில் சாய்ந்தான். அச்சமயத்தில் அச்சிறையில் வேலைசெய்யும் பெண் அவனுக்கு மாலை ஆகா

ரம் கொடுப்பதற்காக அங்கே வந்தாள். அப்போது கதவு திறக்கப்பட்டதும் அதுதான் சமயமென்று விசுவநாதன் வெளியே போய்விட்டான். ஆனால் அவ்வாறு அவன் வெளியே போகும்போது ஒருமுறை வெறுப்புடன் வேலப்பனைப் பார்த்துவிட்டுச் சென்றான்.

மூன்று தினங்களுக்குப்பின் செக் மாற்றவேண்டிய சமயம் வந்தபோது அது பொய்க் கையெழுத்து என்பது ருஜுவாய்விட்டது. உடனே அவன்மீது கிரிமினல் வழக்குத் தொடரப்பட்டது. அவன் சிவில் சிறையினின்றும் கிரிமினல் சிறைக்கு மாற்றப்பட்டான். ஐயோ பாவம்! ஒரு காலத்தில் இரத்தினபுரியில் ரொக்க லேவாதேவி வியாபாரம் செய்து மிக்க பிரக்யாதியுடன் இருந்த வேலப்பன்கதி கிரிமினல் சிறையில் அடைபடவேண்டியதாயிற்று. "முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்" என்பது வேலப்பன் விஷயத்தில் உண்மையாய்விட்டது. ரொக்க லேவாதேவி வியாபாரம் செய்வோர் மகா சிக்கனமாக இருப்பது வழக்கம். தங்கள் வியாபாரம் தவிர இதரஜோலிக்குப் போகமாட்டார்கள். அப்படியிருந்தும் நமது வேலப்பன் செய்த இருகாரியங்களால் இவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியதாயிற்று. விசுவநாதன் அவனிடம் குமாஸ்தாவாக இருந்தபோது அவன் ஏழை என்பதற்காக அவனுடைய சகோதரியைக் கெடுக்கவிரும்பி அவர்களைப் பலவகைத் துன்பங்களுக்குள்ளாக்கினான். ஏழையின் கண்ணீரும் உம்தமமாதின் சாபமும் வீண்போகாது. மேலும் அவன் குமாரவேல்பிரபுவின் மனைவி ஏகநாயகிச் சீமாட்டியின் மோகத்தில் ஈடுபட்டுத் தாராளமாகப் பணத்தை வீண் செலவு செய்தான். குடி, வியபிசாரம் முதலியவற்றில் பணத்தை வீணாக்குகிறவர்கள் விரைவில் அழிந்துவிடுவார்கள் என்பது திண்ணம். இவ்விரு குற்றங்களையுமே வேலப்பன்

செய்ததால்தான் இவ்வளவு கஷ்டநஷ்டங்களை அடைய வேண்டியதாயிற்று. இத்தகைய சந்தர்ப்பங்களை வாசக நேயர்கள் படித்து ஏதோ கதையில் நிகழ்ந்த சம்பவங்களென மறந்துவிடுவதாயின் இந்நூல்களைப் படிப்பதால் ஏதும் பயன் விளையாது. இத்தகைய சம்பவங்களினின்றும் நாம் படிப்பினைகளை அறியவேண்டும். செல்வம் வந்தபோது அகம்பாவம் படைத்து ஏழை எளியாரைத் துன்புறுத்தலாகாது. பணத்தை நெறியல்லா நெறிகளில் செலவழித்து இறைவன் கோபத்துக்குப் பாத்திரர் ஆகக்கூடாது. ஏழையே, செல்வரோ எவராயினும் வியபிசாரத்தில் ஈடுபடுவோர் அழிந்தே தீருவர்.

139 - வது அத்தியாயம்

வேலப்பன் பாங்கியில் மாற்றிய செக் பொய்க் கையெழுத்துடையது என்று தெரிந்த பத்தாவது நாள் செஷன்ஸ்கோர்ட்டில் அவன் வழக்கு விசாரணைக்குவந்தது. வேலப்பன் கூண்டில் நின்றிருந்தான். அவன் முகத்தில் சிறிதேனும் தெளிவு என்பதே காணப்படவில்லை. அங்குக் கூடியிருந்த ஜனங்களெல்லாம் அவனைக் கண்டு பரிதாபமடைந்தனர். வேலப்பன் அதிக வட்டிவாங்கி லேவாதேவி செய்தபோது தனக்குத் துணையாக இருந்த அச்சர்க்கார் முறையை வாழ்த்தினன். ஆனல் இப்போதோ அவன் அதைத் தூற்றினன். அதிக வட்டி வாங்குவதற்குத் துணையாக இருந்த அரசாங்கம் இவ்வாறு பொய்க் கையெழுத்துக்காக மரணதண்டனை விதிப்பதா என்று அரசாங்கத்தினிடம் சீறிவிழுந்தான். ஆறுமணி நேரம் வழக்கு விசாரணை நடந்

தது. வேலப்பனுடைய வக்கீல் வேலப்பனை விடுவிக்கும் பொருட்டுத் தன்னாலான சாமர்த்தியங்களையெல்லாம் காட்டி எவ்வளவோ திறமையுடன் விவாதித்தார். எனினும் எதிரிகுற்ற வாளி எனத் தீர்மானிக்கப்பட்டது. ஜட்ஜ் அவனுக்கு மரண தண்டனை விதித்துவிட்டார். அப்போது வேலப்பன் கண் முன் இருள்மூடியது. உலகமே மூழ்கிவிட்டதே போன்ற பயங்கரக்காட்சி அவன் மனக்கண்முன் தோன்றியது. அப் போது அவன் எத்தகைய பீதியடைந்தான் என்பதைச் சாதாரண மனிதர்களாகிய நாம் ஊகிப்பதும் முடியாத காரி யமே.

அப்போது வேலப்பன் நாற்புறமும் சுற்றிப் பார்த்த போது அவ்வளவு கூட்டத்தினிடையில் பின்புறம் ஒரு பெஞ்சியின்மீது விசுவநாதன் நின்றிருப்பதைக் கண்டான். அச்சமயம் இருவருடைய கண்களும் ஒன்றோடொன்று சந் தித்தன. விசுவநாதன் அவ்வழக்கில் சாட்சியாக வரவில்லை. ஏனெனின் அவ்வழக்குப் பூர்ணமானதாகவும் எளிதாகவும் இருந்ததால் சாட்சியம் அவசியமில்லாமலே இருந்தது. விசுவநாதன் அங்கே நின்றுகொண்டு வழக்கு விசாரணை நடைமுறையைக் கவனித்து வந்தான். வேலப்பனின் முகத் தில் நிமிஷத்துக்கு நிமிஷம் தோன்றிய குறிகளையெல்லாம் கவனித்து வந்தான். நீதிபதி வேலப்பனுக்கு மரணதண்டனை விதித்ததாகக் கூறியபோது வேலப்பன் முகத்தில் உண்டான மாறுவஸ்தைக் குறியைக்கண்டு விசுவநாதன் உள்ளத்தில் உவப்படைந்தான். தன்னை ஒருகாலத்தில் படமுடியாத கஷ் டங்களுக்குள்ளாக்கிய வேலப்பனைப் பழிவாங்கியதில் விசுவ நாதனுக்குத் திருப்தி அதிகம்.

மறு நிமிஷமே திக்பிரமையுடன் மனங்கவங்கி நிற்கும் வேலப்பன்மீது யாரோ சிலரின் கைகள் பட்டன. உடனே

வேலப்பன் எமனே தன்னைத் தொட்டாற்போலக் கருதி நடு நடுங்கினான். திரும்பிப் பார்த்ததில் சிறைக் காவலாளிகள் அவனைச் சிறைக்கு அழைத்துச்செல்ல அவனைப் பிடித்ததை அறிந்தான். அவர்கள் அவனைப் பிடித்துச் சிறை அறைக்கு அழைத்துச் சென்றார்கள். அவன் ஏதோ கனவில் நடப்ப வனேபோல் அவர்களுடன் நடந்து சென்றான். அவனுடைய கை கால்களெல்லாம் தன் தேகத்தில் இணைக்கப்பட்டிருக் கிறதா இல்லையா என்பதும், கைகால்கள் தானாக நகருகின் றனவா? அல்லது தானே நடக்கிறானா என்பதும் அவனுக் குச் சந்தேகமாகப் போய்விட்டது. இப்படிப்பட்ட மானா வஸ்தை நிலைமையில் அவன் நடந்து சென்றான். அப்போது அவனை அக்காவலாளிகள் அச்சிறையின் மற்றொரு பாகத்தி லுள்ள தனி அறையில் கொண்டுபோய் அடைந்தார்கள். மாண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் அடைக்கப்படும் இடத் தில் அவன் தனியாக அடைக்கப்பட்டான். அவன் தன் ஆயுள்நாளை எண்ணவேண்டிய நிலைமையில் வந்து விட்டான். அவன் தனியாக இருந்தானென்றாலும் தன்காலம் முடிந்து விட்டதால் பற்பல நிகழ்ச்சிகளைப்பற்றி நினைத்தாதலால் அந்நினைப்புகளே அவனுக்குத் துணையாக இருந்தன.

இச்சமயத்தில் ஒரு விஷயத்தை நேயர்களுக்கு அறி விக்கவேண்டியது அவசியமாகும். அதாவது வழக்கில் தீர்ப்புக் கூறுகிறவரையில் எதிரி ஒன்றுமறியாத குற்றமற்றவ ராகவே நினைக்கப்படுவார். அப்போது எதிரி தன் சொத்தை எவ்வாறு வேண்டுமாயினும் பைசல் செய்யலாம். தீர்ப்புக் கூறிய பின்னர் குற்றவாளியின் சொத்து முழுதும் அரசாங் கத்தைச் சேர்ந்து விடுகிறது. ஆதலின் நமது வேலப்பன் தன் விசாரணைக்கு முதல்நாளே தன்னிடமிருந்த பணத்தை யெல்லாம் தன் மனைவியிடம் கொடுத்து விட்டான். ஏனெ

னின் இவ்வுலகில் அவனைவிட அதிகமாக நம்பத்தகுந்த மனிதர் வேறு யாரும் வேலப்பனுக்கு இல்லை. தன் மனைவியும் தன்னிடம் அன்பில்லாதவளாகவும் மிகக் கொடியவளாகவும் அதிக செலவு செய்பவளாகவும் இருந்தாலும் வேறு யாரும் உற்றதுணை யில்லாததால் வேலப்பன் தன்னிடமிருந்த பணத்தைத் தன் மனைவியிடமே கொடுக்கவேண்டிய தாயிற்று. அவன் அதைத் தன் மனைவியிடமும் கொடுக்காமல் தானே வைத்துக்கொண்டால் மறுநாள் அதை அரசாங்கத்தார் எடுத்துக்கொண்டு விடுவார்களாதலால் தன் மனைவியிடமே அதைக் கொடுப்பது உசிதமெனக் கருதினான்.

ஆனால் மரணதண்டனை விதிக்கப்பட்ட பின்னர் மறுநாள் கைவிலங்குடன் சிறையின் அறையில் தனியாக உட்கார்ந்துகொண் டிருக்கையில் பற்பல விஷயங்களைப்பற்றிச் சிந்திக்கலாயினான். அப்போதுதான் தன் மனைவியிடம் கொடுத்த பணத்தைப்பற்றியும் சிந்தித்தான். ஏன் அதைப் பற்றிச் சிந்திக்கவேண்டுமெனச் சிலர் சந்தேகப்படலாம். உயிர்போகும் தருணத்திலும் இவ்வுலகப்பற்று அதிகமாக உடையவர்கள், சிறு துரும்பைப்பற்றிக் கொண்டேனும் உயிர்தப்ப முயற்சி செய்வர். அவ்வாறு செய்வது இயற்கையே யன்றோ? ஆகவே வேலப்பன் அத்தொகை தன்னிடமிருந்தால் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியுமோ எனக் கருதினான். ஏனெனின், சிறைக் காவலாளிகள் லஞ்சம் வாங்கமாட்டார்களா. அவர்களுக்கு ஏதேனும் ஐந்நூறு அல்லது அறுநூறு பவுன் லஞ்சம் கொடுத்தால் மெல்ல தப்பிப்போய் வேறு எங்கேனும் தலை மறைந்து கொள்ளலாமல்லவா? மீதி பணத்தைக்கொண்டு தன் வாழ்க்கையைச் சென்ற இடத்தில் நடத்தலாமல்லவா? தன்னிடமிருக்கும் தொகையை யெல்லாம் லஞ்சம் கொடுத்து விடுவதாகவே

வைத்துக்கொண்டாலும், கையில் காலணு இல்லாமல் பிச்சைக்காரனுகவேனும் உயிர் தப்பிப் பிழைத்தால் போதுமல்லவா? சாதாரணமாக உலகில் தினசரி பிச்சை எடுத்துச் சாப்பிடும் பரமதரித்திரனும் எளிதில் உயிரைத்துறக்க பிரியப்படுகின்றனரா? சென்னை போன்ற நகரங்களில் எத்தனையோ குருடர்களும் மற்றும் அங்கவீனர்களும், பல குழந்தைகளுடன் டிராம் ஓடும் வழிகளிலும், இரண்டு மூன்று தெருக்கள் சேரும் சந்திகளில் ஒரு பைசாவுக்காக அடித்துக்கொள்வதைப் பார்த்தால் அந்தோ பரிதாபம்! அவர்களும் மோட்டார்களோ இதர போக்குவரத்து சாதனங்களோ மிக வேகமாக ஓடி வரும்போது தங்கள் இனிய உயிர்களைக் காப்பாற்றிக்கொள்ள என்ன பாடு படுகின்றனர்! எனவே இவ்வுலக வாழ்க்கை இன்பத்தை நன்கு அனுபவித்தறிந்த நமது வேலப்பன் விரைவில் இவ்வுலகைவிட்டு நீங்க விரும்பாமலிருந்ததில் ஆச்சர்ய மொன்றுமில்லை.

மறுநாள் காலை சிறைக்காவலாளி வேலப்பன் இருந்த அறையின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றபோது வேலப்பன் காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும் என்னும் முதுமொழிக் கிணங்கவும், வீண் காலதாமதம் செய்ய மனமில்லாமலும் அக்காவளியிடம் தன் உட்கருத்தைத் தெரிவிப்பதற்காக ஏதோ குறிப்புக்காட்டிப் பேச ஆரம்பித்தான். ஆனால் அக்காவலாளியோ மிகக் கோபத்துடனும் அதிகார தோரணையிலும் சுருக்கமாகவும் பேசியதாலும், அவன் முகத்தில் இரக்கமற்ற தோற்றமே காணப்பட்டபடியாலும் அவனிடம் தன் எண்ணத்தைப் பிரஸ்தாபிப்பதில் பயனில்லையெனக் கருதினன். எனவே அதிகம் பேசவும் அவன் நா எழவில்லை. அக்காவலாளி வேலப்பனைக்கண்டு, "இங்கே சிறையிலுள்ளார்க்கு வேலை

செய்யும் பரியாரி வந்திருக்கிறான். உமக்கு இஷ்டமானால் நீர் க்ஷவரம் செய்து கொள்ளலாம்'' என்றான்.

வேலப்பன் முதலில் க்ஷவரம் செய்துகொள்வதில்லை யெனச் சொல்லிவிடலாம் என நினைத்தான். ஏனெனின் இரண்டொரு நாட்களில் தூக்கில் ஏறப்போகிற அவன் க்ஷவரம் முதலியன செய்துகொண்டு தன் தேகத்தினிடம் என் அதிகம் பற்றுகொள்ளவேண்டும் என நினைத்தான். ஆனால் அவ்வாறு சொல்வதற்குமுன் அவன் உள்ளத்தில் திடீரென்று வேறொரு எண்ணம் தோன்றிற்று. அதாவது அந்தப் பரியாரியேனும் தன் முயற்சிக்கு எவ்வகையிலேனும் துணைபுரிவானோ என்பதேயாகும். ஆகவே அவன் கடைசியாகத் தான் க்ஷவரம் செய்துகொள்ளப்போகத் தெரிவித்தான். எனவே சில நிமிஷத்துக்குள் பரியாரியும் வேலப்பனுடைய அறைக்கு வந்து சேர்ந்தான்.

வேலப்பனும் அந்தப் பரியாரியும் மட்டுமே தனியாக அவ்வறையில் இருந்ததால் வேலப்பன் அவனை நன்றாக உற்று நோக்கினான். அவன் தன் யோசனைக்கு உதவிசெய்வான் எனவே தோன்றியது. வேலப்பன் தன்னைக் கூர்ந்து நோக்குகிறான் என்பதை அப்பரியாரியும் உணர்ந்துகொண்டான் என்றாலும் தான் அதைக் கவனியாதவன்போல் இருந்தான். இறுதியாக வேலப்பன் அவனைப் பார்த்து, "நீதான் சிறையிலுள்ளவர்களுக்கு வேலைசெய்யும் பரியாரிபோலும்!'' என்றான்.

பரியாரி:—ஆம்; இப்போது தற்காலிகமாக நான் இவ்வேலையைப் பார்த்துவருகிறேன். நிரந்தரமாக வேலைசெய்பவர் தேக அசௌக்கியத்துடன் இருக்கிறார்.

வேலப்பன்:—அப்படியானால் நிரந்தரமாக வேலைசெய்பவன் நீ அல்லவோ? நீ எத்தனை நாட்களாக இவ்வேலையைச் செய்துவருகிறாய்.

பரியாரி:—சுமார் ஆறுவாரங்களாகச் செய்துவருகிறேன்.

வேலப்:—நீ இன்னும் சொற்பகாலம் இங்கு வந்துகொண்டிருப்பாயோ?

பரியாரி:—ஆம்; நிரந்தரமாகச் செய்பவர் மிக்க அசௌக்கியமாக இருப்பதால் நானே இன்னும் சொற்பகாலம் இவ்வேலையைக் கவனித்து வருவேன் என நினைக்கிறேன்.

வேலப்:—அப்படியானால் நீ தினசரி காலையில் எனக்கு க்ஷவரம் செய்யவேண்டும். எதுவரை தெரியுமா?

இதற்குள் யாரோ மனிதர் நடந்துவரும் சத்தம் கேட்டதால் வேலப்பன் தன் பேச்சை நிறுத்திக்கொண்டான்.

பரியாரி:—நான் அவ்வாறு தினசரி தங்களுக்கு க்ஷவரம்செய்ய சந்தோஷப்படுகிறேன். தங்களைப் போன்ற ஒருவர் இங்கே இருப்பதைக் காண உண்மையில் நான் வருந்துகின்றேன்.

வேலப்:—அது கிடக்கட்டும். உன் பெயர் என்ன?

பரியாரி:—என் பெயர் குள்ளன். நான் அவ்வளவு சமர்த்தனு யிருக்கவில்லை. ஆனுல் இந்நகரில் பெயர்பெற்ற தானப்பன் ஒரு க்ஷவரக்கடை வைத்திருக்கிறுன் அவனிடம் கற்றுக்கொண்டு தயாரானேன்.

என்று சொன்னதும் திடீரென்று மேலே பேசாமல் நிறுத்திக்கொண்டான். ஏனெனின் தானப்பன் பெயர் தன் எதிரிலிருக்கும் கனவானுக்கும் தெரிந்திருக்குமோ என்னும் அச்சம் தோன்றலாயிற்று.

அப்போது வேலப்பன் சிறிது ஆறுதலடைந்தவன் போல் தெளிவுடன் பேச ஆரம்பித்து, "உன் எஜமானன் தானப்பனு! அவன் மிக நல்லவன் என்றும், எப்படிப்பட்ட

சமயத்திலும் எவருக்கும் உதவிசெய்பவன் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆதலின் நீயும் நல்லவனுகவே இருக்க வேண்டும். அதில் ஒன்றும் சந்தேகமில்லை. நீ நல்லவன் என்றே உன் முகத்தின் தோற்றத்தால் தெரிகிறது. நீ உன்னைப்போன்ற ஒரு மனிதனுக்கு அதாவது உன் சகோதரன் ஒருவனுக்கு உதவிசெய்வாயா? அவ்வுதவிசெய்தால் உனக்கு வேண்டிய பொருள் தரப்படும்'' என்று தைரியமாய்க் கூறிவிட்டான்.

இதைக்கேட்டதும் பரியாரிக்கு ஆச்சர்யம் அதிகரித்துவிட்டது. ஆனல் அவனிடம் சந்தேகமும் ஏற்பட்டது. எனினும் வேலப்பனைப்பற்றிய உண்மை விவரங்களை அறிந்துகொள்ள வேண்டுமென்னும் ஆவல் அதிகரித்துவிட்டது. ஆகவே அவன் தந்திரத்துடன், "தானப்பனுக்குப் பணம் கொடுத்தால் அவன் செய்யாதது ஒன்றும் இராது'' என்று கூறினன்.

அப்போது வேலப்பன், "அப்படியானல் அவனிடம் ஒரு விஷயத்தைச்சொல், நான் ஐந்நூறு பவுன்களைக் கொடுக்கிறேன். அவன் என்னை இந்தப் பாழும் சிறையினின்றும் வெளியேற உதவி செய்தால் நான் கட்டாயம் அத்தொகையை அவனுக்குத் தருவேன். இதை நீ அவனிடம் சொல்லவும்,'' என்ருன்.

இதைக்கேட்டதும் பரியாரி சொல்லொணு ஆச்சர்யமடைந்து, "ஆ! நீ இன்னமும் தப்பிப் பிழைத்து விடலாம் என்னும் நம்பிக்கை யுடையவனுக இருக்கிருயா?'' என்று கேட்டான்.

அதற்கு வேலப்பன், "ஏன்? சந்தேகமென்ன? நான் நிச்சயமாகவே நம்பிக்கை யுடையவனுக இருக்கிறேன். நான் இதற்குள் சாகமுடியாது. ஐந்நூறு பவுன்கள் தரு

வேன் என்பதைக் கவனியுங்கள். அதுவும் போதாதென்ருல் அதிகமும் கொடுக்கப்படும். ஆனல் ஐந்நூறு பவுனே பெரிய தொகை; அதை வைத்துக்கொண்டே எவ்வளவோ காரியங்களைச் செய்யலாம். நான் இப்போது உன்னிடம் கூறியவற்றை யெல்லாம் தானப்பனிடம் தெரிவி'' என்று மிக்க அவசரமாகக் கூறினன்.

அப்பரியாரி, "சரிதான் ஐயா, நான் அப்படியே தாங்கள் சொன்னதையெல்லாம் தானப்பனிடம் சொல்லி அவன் தெரிவிக்கும் பதிலை நாளை காலை இங்கு வரும்போது தங்களிடம் கூறுகிறேன். நான் தங்களுக்கு உடனே க்ஷவரம் செய்கிறேன். ஏனெனின் இன்னும் இரண்டொரு நிமிஷத்தில் காவலாளி வந்து என்னை வெளியே போகச்சொல்வான். அப்போது நான் க்ஷவரம் செய்யவும் ஆரம்பிக்கவில்லை யென்ருல் அவன் நம்மீது ஏதேனும் சந்தேகப்பட இடமுண்டாகும்'' என்ருன்.

ஆகவே வேலப்பனும் க்ஷவரம் செய்துகொள்ள உட்கார்ந்தான். க்ஷவரம் முடிந்ததும் சிறைக்காவலாளியும் அங்கு வந்து பரியாரியை வெளியே அனுப்பினன். பரியாரி வெளியே சென்ற பின்னர் அன்று பகலெல்லாம் வேலப்பன் பலவிதமாகத் தன் நிலைமையைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தான். அன்று மாலையில் வழக்கப்படி மத உபதேசம் செய்யும் குரு அங்கு வந்து பல விஷயங்களைப்பற்றிப் பிரசங்கம் செய்தார். அவற்றையெல்லாம் வேலப்பன் கவனத்துடன் கேட்டான். அவன் சாதாரணமாக சமயத்தில் பற்றுடையவனல்லன். ஒழுக்கம் முதலியவற்றை அவன் அதிகமாகக் கவனிக்க மாட்டான். இப்போது ஆயுள் முடிந்து விடுகிற காலமாக இருப்பதால் அவன் மதவிஷயத்தில் சிறிது சிந்தை செலுத்தினன்.

அன்றைய நாள்முழுதும் கழிந்துகொண்டே வந்தது. தன் மனைவியும் மகளும் என் தன்னைக்காண வரவில்லையென்று வேலப்பன் ஆச்சரியமடைந்தான். விசாரணைக்கு முன்னாள் தன் மனைவியிடம், அவளும் தன் குமாரியும் விசாரணையன்று கோர்ட்டுக்கு வரவேண்டாமென்று சொல்லிவிட்டிருந்ததால் மரணதண்டனை விதிக்கப்பட்ட செய்தியை வேலப்பனுடைய வக்கீல் அவனுடைய மனைவிக்குத் தெரிவிக்கவேண்டி யிருந்தது. மரணதண்டனை விதிக்கப்பட்ட அத்தினத்திலேயே அவர்கள்வந்து அவனைக் காணாததில் ஆச்சரிய மொன்றுமில்லை. மேலும் வேலப்பனுடைய மனைவி அவ்வளவு உண்மையுள்ளவளாயும், கணவனிடம் அபிமான முள்ளவளாயும் இருக்கவில்லை.

ஆனால் வேலப்பனுடைய குமாரிக்குமட்டும் தன்தந்தையினிடம் அன்பு அதிகம். ஆதலின் தன் தந்தையின் பரிதாப நிலைமையைக் கண்டு அவள் மிகவும் வருந்தினாள். தன் மனைவியும் மகளும் என் வரவில்லையென்று வேலப்பன் சிந்தித்துக்கொண்டிருந்த சமயத்தில் தன் அறையின் கதவு திறக்கப்பட்டது. இரு மாதர்கள் துக்க உடையை அணிந்துகொண்டு அங்கே வந்துசேர்ந்தார்கள். அவர்கள் தங்கள் முகமூடியை அப்புறப்படுத்தியதும் வேலப்பனை ஆலிங்கனம் செய்துகொண்டு பெருமூச்சுவிட்டுக் கண்ணீரும் கம்பலையுமாகத் துக்கப்பட்டார்கள்.

அவ் விருமாதர்களையும் அந்த அறையில் கொண்டுவந்து விட்ட சிறைக்காவலாளி வெளியே சென்றதும் வேலப்பன் அவர்களுடைய ஆலிங்கனத்தினின்றும் தன்னை விலக்கிக்கொண்டு "என்ன இப்படிச் செய்தீர்கள்" என்று இருவரையும் பார்த்துக் கேட்டான்.

உடனே வேலப்பன் மனைவி, "ஓ! எனது அன்புள்ள கணவரே! நானும் குமாரியும் இன்று காலையிலேயே வர வேண்டுமென்று நினைத்தோம். ஆனால் துக்க ஆடையைத் தைக்கும்படி நேற்று மாலையே சொல்லி யனுப்பியும் தையற்காரன் அதைக் கொண்டுவந்து கொடுக்கத் தாமதமாய் விட்டது" என்று சமாதானங் கூறினாள்.

தன் மகளும் மனைவியும் தன் நிலைமையைச் சிறிதும்; அறியாமல் இவ்வாறு ஆடம்பரத்துடன் அங்கு வந்ததால் அதிக ஆத்திரமும் கோபமுமடைந்த வேலப்பன் தன் நிலைமையையும் மறந்து அவர்களைக்கண்டு. "நீங்கள் செய்தது சரியல்ல. உங்களுக்குச் சிறிதேனும் துக்கமென்பதில்லை என்றும், வீண் ஆடம்பரத்திலேயே இன்னமும் உங்கள் வாழ்க்கையைக் கழிக்கிறீர்களென்பதும் இதனால் தெரிகிறதல்லவா? நான் முன்னரே இறந்துவிட்டது போலல்லவோ நீங்கள் கருதுகிறீர்கள்" என்று கேட்டான்.

அப்போது அவனுடைய மகள்மட்டும் தன் தந்தையின் மீது விழுந்து துக்கத்துடன் தன்னை மன்னிக்க வேண்டுமென்றும், தான் எல்லாவிஷயங்களிலும் தன் தாயின் கட்டளைப்படியே நடந்து கொண்டதாகவும், ஆதலின் தன்னிடம் குற்றமில்லையென்றும் கூறினாள்.

வேலப்பன் தன் நெருங்கிய சுற்றத்தாரிடம் பட்சத்துடன் நடந்துகொள்ளும் சுபாவமற்றவனாதலால் தன் மகளின் கையை அப்புறம் தள்ளிவிட்டு, "இப்போது நாம் அதைப்பற்றியெல்லாம் அதிகம் பேசலாகாது" என்று கூறிய பின் தன் மனைவியைப் பார்த்து, "நான் கொடுத்த நகை பத்திரமாக இருக்கிறதா" என்று கேட்டான்.

18657
-600 003

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ளு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" "இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" "சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி இரகசியம் 3-ம், 4-ம் பாகம் நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரி ரகசியம் 5-ம்பாகம் என்கிற நாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3 0

ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலை௴ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபா தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-8-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.
இரத்தினபுரி இரகசியம் 4-பாகமும் ...	8	4
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0
கற்கோட்டை ...	2	0
மின்சார மாயவன் ...	1	8
தேவசுந்தரி ...	1	4
கனகபூஷணம் 2 பாகம் ...	3	8
இராஜாமணி ...	2	0
ஆனந்தவிங் ...	2	0
மதனபூஷணம் ...	1	0
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ...	9	10

தினகரசுந்தரி ரூபா	1	0
தபால்கொள்ளைக்காரர்	0	14
ரத்தினாபாய் ...	1	12
வீரநாதன் ...	0	12
குணசுந்தரன் ...	0	12
மஞ்சள் அறையின் மர்மம்	1	8
கமலசேகரன் ...	1	12
பூங்கோதை ...	0	10
இந்திராபாய் ...	2	8
அமராவதி 2 பாகமும்	4	0
மதனாம்பாள் 2 பாகமும்	3	0
லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
6, லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.